விலை ரூபா: 7.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பதின்னான்கு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 22 செவ்வாய்க்கிழமை (07.12.2004) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 354

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## பெரும்பான்மைக் கட்சிகள் ஓரணியில்

# பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு

# அரசுக்கு ஐ.தே.க. ஆதரவு!

### தமிழ்க் கூட்டமைப்பு மற்றும் மகேஸ்வரன் எம்.பி. எதிரணியில்



(கொழும்பு)

**பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வாக்களித்து அதனை அமோக வெற்றியீட்டச் செய்தது.**

**இவ்வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம். பி. தி. மகேஸ்வரன் மற்றும் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிராக வாக்களித்தனர்.**

நேற்று பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இது 118 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வாக்கெடுப்புக்கு ஆதரவாக 140 வாக்குகளும் எதிராக 22 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இவ் வாக்கெடுப்பில் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி நிதி ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக வாக்களித்து அதனை வெற்றிபெறச் செய்தது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாவட்ட எம்.பி. தி. மகேஸ்வரன் தனது கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிரான வகையில் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராக வாக்களித்தார்.

தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீட்டுக்கு எதிராகவே வாக்களித்தனர்.

இதேவேளை சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

(இ-08)

## தமிழ் இளைஞர் இருவர் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பு கடற்படைத் தலைமையகத்தை அண்டிய பிரதேசத்தில் வைத்து இரண்டு தமிழர்கள் நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கே.சண்முகராஜா, கே.மகேந்திரன் ஆகிய இருவருமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் மேலதிக விசாரணைக்காக துறைமுகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரான்ஸிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட இளைஞர் விரக்தியில் உயிரை மாய்த்தார்

### துன்னாலை மேற்கில் சம்பவம்

(துன்னாலை)

பிரான்ஸ் நாட்டிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட துன்னாலை இளைஞர் ஒருவர் விரக்தியுற்ற நிலையில் நேற்றுக்காலை நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

சம்பவத்தில் துன்னாலை மேற்கைச் சேர்ந்த 25 வயதுடைய பாலசோதி பவிந்தன் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப இளைஞர் அகதி அந்தஸ்துக்கோரி பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றிருந்தார். 3 வருடங்களாக அங்குள்ள அகதிமுகாம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் இடைக்கால திட்ட வரைபு பிரச்சினைக்கான இறுதி தீர்வல்ல!

### சு.ப. தமிழ்ச்செல்வன் சிங்கள மக்களுக்கு விளக்கம்



(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு யோசனையானது அரசுக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையோ அல்லது இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வோ அல்ல.**

**இப்படி மிகவும் தெட்டத்தெளிவாக தென்பகுதி சிங்கள மக்களுக்கு விளக்கமளித்திருக்கிறார் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன்.**

அரச வானொலியின் 'சுபாரதி' சிங்கள சேவை விசேட நிகழ்சிக்கு வழங்கிய பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளருக்கு தமிழில் அளித்த விளக்கத்தை அரசியல் பணிமனையைச் சேர்ந்த ஜோர்ஜ் சிங்களத்தில் மொழிபெயர்த்தார்.

அப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான எமது பிரேரணையில் நிராகரிக்கக்கூடிய அம்சங்கள் இருக்குமானால் அவற்றைப் பேசித் தீர்க்க முடியும்.

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக சேதமடைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகள் புனரமைக்கப்பட்டு, இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரக் கூடிய நிலைமை போர்நிறுத்த உடன்படிக்கை அமு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் உரையின் சூசகம் என்ன ஜனாதிபதி சொல்ஹெய்மிடம் கேள்வி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையில் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கப்போவதாகக் கூறியுள்ளாரா? இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளின் தலைவரின் உரை குறித்து அறிந்துகொள்ளும் வகையில் முதலில் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்பிரஸ்கரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட ஜனாதிபதி மேற்குறித்த கேள்வியை அவரிடமும் கேட்டார்.

அத்துடன் பிரபாவின் உரையில் யுத்தம் பற்றி சூசகமாக ஏதாவது கூறப்பட்டுள்ளதா என்றும் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த தூதுவர் பிரஸ்கர் பிரபாகரனின் உரையில் என்ன விடயம் சூசகமாக கூறப்பட்டுள்ளதென்றோ, விடுதலைப் புலிகள் யுத்தத்திற்குத் திட்டமிட்டு இருக்கிறார்களா என்பது பற்றியோ நோர்வேக்கு எதுவும் தெரியாது

(14 ஆம் பக்கம் பார்க்க)



ஆறறிவு படைத்த மனிதனே தனக்குள் ரணகளப்படும்போது ஐந்தறிவு படைத்த ஜீவன்களின் ஒற்றுமையைப் பார்த்தீர்களா? நாய் பூனைக்குட்டிக்கு அன்புடன் பாலூட்டி வளர்க்கும் இவ் வியப்புச் சம்பவம் வடமராட்சியில் நடைபெற்றுள்ளது. படம்: செய்தியாளர் வே. முருகானந்தசோதி

கிளிக் செய்தவர்: மகேஸ் போட்டோ வல்வெட்டித்துறை

## சவுதியிலுள்ள அமெ. தூதரகம் மீது தீவிரவாதிகள் பாரிய தாக்குதல்

### 7 பேர் பலி; 18 பேர் கைதிகளாகப் பிடிப்பு?

(றியாத்)

சவுதி அரேபியாவிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதரகம் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட பாரிய திடீர்த் தாக்குதலில் தூதரக பாதுகாப்பு அதிகாரிகள் நால்வர் உட்பட ஏழு பேர் பலியாகியுள்ளனர்.

அங்கு பணியாற்றிய பதினெட்டு பேர் தீவிரவாதிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் நால்வர் இலங்கையர் எனவும் கூறப்படுகின்றது.

ஐந்து துப்பாக்கிதாரிகள் பலத்த பாதுகாப்பு அமைப்புடைய வாயிலை வெடிமருந்துகளால் தகர்த்து குண்டுகளுடனும் தானியங்கி துப்பாக்கிகளுடனும் தூதரக வளாகத்தினுள் நுழைந்தனர். இதனைத் தொடர்ந்து பாதுகாப்புப் படையினர் வளாகத்திற்குள் புகுந்த தீவிரவாதிகளுடன் மோதியதில் இராணுவத்தினர் நால்வரும் தீவிரவாதிகள் மூவரும் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

இது தொடர்பாக இலங்கைக்கான சவுதித் தூதரகம் இப்ராகிம் சாகிட் அன்சார் தகவல் தெரிவிக்கையில்,

(14 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஒரு தகவல்

# புத்தகம்

சிலா புத்தகம் எழுதினால் அதற்குப் பரிசு கொடுக்கலாம் போலிருக்கும். சிலர் புத்தகம் எழுதாமல் இருந்தால் அதற்கு ஏதாவது பரிசு கொடுக்கலாம் போல் தோன்றும்.ஒரு நல்ல புத்தகம் அறிவை வளர்க்க வேண்டும் படிக்கப்படிக்க அறிவு வளரவேண்டும் அறிவு வளர வளர பண்பாடு வளரும் என்றார் ஒரு பெரியவர்.

புத்தக வாரம் என ஒன்று கொண்டாடுகின்றனரே எதற்கு? புத்தக வியாபாரம் பெருக வேண்டும் என்பதற்காகவா? அதுமடடுமல்ல படிக்கின்ற பழக்கம் அதிக பேருக்கு வரவேண்டும். நலல நூல்களைப் படிக்க வேண்டும். படிப்பிலிருந்து அறிவு, அறிவிலிருந்து பண்பாடு என வளர்ச்சி வரவேண்டும். படித்தவர்களையெல்லாம் அறிவாளிகள் என்று ஒத்துக்கொள்ள முடியாது. அறிவாளிகளையெல்லாம் பண்பாட்டில் உயர்ந்தவர்கள் என்று ஒத்துக்கொள்ளமுடியாது.

அப்பாவிகளை விட அறிவாளிகள் ஆபத்தானவர்கள் என்று சொன்னார் ஒருவர். அளிவாளிகள் அறிவை தவறான வழிக்குப் பயன்படுத்தினால் அதனால் உண்டாகும் ஆபத்து அதிகம். சிலர் அறிவைப் பயன்படுத்தி என்ன செய்வார்கள் தெரியுமா? மிக நவீனமான வெடிகுண்டுகள் தயாரிக்கின்றனர். "இது எதற்கு? சண்டையிடுவதற்கா?" என்று கேட்டால் "இல்லை சமாதானத்திற்காக" என்கின்றனர்.

இப்படி வெடிகுண்டுகள் தயார் செய்வதற்குத் தேவையான பணத்தை "யுனெஸ்கோ" நிறுவனத்திற்குக் கொடுத்தால இந்த உலகில் எல்லோருக்கும் கல்வி அறிவைப் பெறறுக்கொடுக்கலாம் என்று கணக்கிட்டுச் சொல்கின்றனர். ஐக்கியநாடுகள் சபையில் ஆயுதத்தடை நிலையம் ஒன்று உள்ளது. அங்கிருந்த டாக்டர் என்ன சொன்னார் தெரியுமா? ஒரு போர் விமானம் தயார் செய்வதற்கு 50 கோடி டொலர் பணம் செலவாகிறது. இந்தப் பணத்தை உலக நலவாழ்வு ஸ்தாபனத்திடம் கொடுத்தால் இந்த உலகில் மலேரியா, தொழுநோய், சருமநோய் போன்றவை சுத்தமாக இல்லாமல் செய்து விடலாம்" என்கிறார்.

புததகம் படிப்பதனால் கிடைக்கும் அறிவை அறிவு பூர்வமாகப் பயன்படுத்தினால் தான் பண்பாடு வளர்ந்ததாக அர்த்தம். எல்லாப் புத்தகமும் வாழ்க்கைக்குத் துணையாக ஆகிவிடாது. திருக்குறளைத்தான் வாழ்க்கைத் துணை என்று சொல்கிறோம். பஸ் புத்தகங்களை பஸ்துணை என்று சொல்லலாம்.பஸ் பயணம் முடியும் வரை அது துணையாக இருக்கும். அதன்பின் பிரிந்து விடும்.சில புத்தகங்கள் ஒரு வாரத்திற்கு துணையாக இருக்கும். அதன்பின் போய் விடும். அடுத்த வாரத்திற்கு வேறு புத்தகம் வரும்.

கடையில் போய் இந்த வாரப்பத்திரிகை வந்துவிடடதா என்று தான் கேட்போம். இந்த வார திருக்குறள் வந்து விட்டாதா என்று கேட்பதில்லை. அது எப்போதும் நம்முடனே இருக்கும்.

நலல புத்தகத்திற்கு அது தான் அழகு. "கறகாமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல் ஏனென்றால் அறியாமை தான் கஷ்டங்கள் அனைததிற்கும் காரணம்" என்கிறார் பிளேட்டோ.

கொஞ்ச நாட்களுக்கு முன் பத்திரிகைச் செய்தி ஒன்று அமெரிக்காவில் கிளிண்டன் வில்லி என்ற இடததில் உள்ள தம்பதிகள் இருவர் புத்தகங்களாக வாங்கிக் குவித்ததில் வீடு முழுதும நிரம்பி பக்கத்து வீட்டையும் விலைக்கு வாங்கினாராம. அவர்களிடம் மொத்தம் 42 ஆயிரம் புத்தகம் இருந்ததாம்.

1925இல் பெர்னாட்ஷாவுக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு கொடுத்தனர். அவர் சொன்னார் அப்போது "இந்த வருடததில் நான் புத்தகம் எதையும் எழுதி வெளியிடவில்லை. உலகம் அதைக் கண்டு விடுதலை உணர்ச்சியுடன் சந்தோஷப்பட்டு எனக்கு நன்றி தெரிவித்துச் செய்த காரியம் இது" என்றாராம் தமாஷாக.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வெள்ள நிவாரணம் வழங்க விபரப்பட்டியல் கோரல்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏற்படும் வெள்ள அழிவுகள் பற்றிய விபரங்களை பட்டியல் படுத்தித்தருமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் ரி.சத்தியசீலன் கிராம அலுவலர்களை பணித்துள்ளார்.

கடும் மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுககு உதவிகளை வழங்குவதற்காகவே இவ்வாறு விபரப்பட்டியல் கோரப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெறற கிராம அலுவலர்க்கான கூட்டமொன்றில இப பணிப்புரையை உதவி அரசாங்க அதிபர் விடுத்துள்ளார். (ப-35)

## யாழ். வர்த்தக வங்கியினால்

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பதினைந்து மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வர்த்தக வங்கியின் யாழ். கிளையினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் ஐந்தாம் தரபுலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை 11.00 மணிக்கு யாழ். கிளையில் நடைபெற்றது.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தோற்றும் போது அம் மாணவர்கள் வர்த்தக வங்கியில் அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கில் 5 ஆயிரம் ரூபாவிற்கு மேல் வைப்புச்செய்திருந்து, அவாகள் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து, தாம் கல்வி கற்ற பாடசாலையில் புள்ளி அடிப்படையில் முதல் மூன்று இடங்களுக்குள் வந்திருந்தால் அவ்வாறான மாணவர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

முதலாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு 7ஆயிரத்து 500 ரூபாவும் மூன்றாம் இடம்பெற்ற மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இந்த வகையில் யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் வர்த்தக வங்கியினால் தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இநநிகழ்வில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு பத்திரிகையின் பிரதம ஆசிரியர்கள் பரிசில் பெற்ற மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலை அதிபாகள் மற்றும் பெற்றோர்கள்,வங்கி முகாமையாளர் ரவீந்திரா, பிரதி முகாமையாளர் வினோ குருபாதம் மற்றும் வங்கி அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் வங்கி முகாமையாளர் வர்த்தக வங்கியினுடைய செயற்பாடுகள் பற்றியும் வளர்சசி பற்றியும் மாணவர்களின் சேமிப்பு தொடர்பாகவும் தன்னியக்க இயந்திரம் ஊடாக பணம் பெறுவது தொடர்பாகவும் எடுத்துக் கூறினார்.

இலங்கையில உள்ள நிதி நிறுவனங்கள் நாடளாவிய ரீதியில் வருடா வருடம் சிறந்த வணிக வங்கிகளைத் தெரிவு செய்து வருகின்றது. அந்த வகையில் இலங்கை வர்த்தக வங்கி ஆறாவது தடவையாகவும் அதி சிறந்த வங்கியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-19)

# சமூகங்களிடையே நல்லுறவைக் கட்டியெழுப்புவதே தெற்காசிய நாடுகள் எதிர்நோக்கும் பாரிய சவால்

## இந்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர்

(கொழும்பு)

பல்வேறு சமூகங்களைக் கொண்டுள்ள நாடொன்றில் சமூகங்களுக்கிடையே நல்லுறவைக் கட்டியெழுப்புவதே தெற்காசிய நாடுகள் எதிர்நோக்கியுள்ள பிரதான சவால் என இந்திய எரிபொருள் இயற்கைவாயு அமைச்சர் மணி சங்கர் ஐயர் தெரிவித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்று 10 ஆண்டுகள் நிறைவையொட்டி நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

சமூகங்களுக்கிடையே நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், சமூகங்களுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவது அவசியம்.

எமக்குப் பாரிய சவாலாக இருப்பது பல்லின மக்கள் வாழும் சமூகத்தில் தேசியத்தைக் கட்டியெழுப்புவதாகும். பல்வேறு இனங்களைச் சேர்ந்த அனைவரினதும் உரிமைகளை ஏற்றுக்கொண்டு பூரண சமநிலை நிலவுமாயின் மட்டுமே தேசியத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

பெரும்பான்மை என்ற எண்ணக்கருவை விட சமத்துவம் பற்றிய உணர்வே அவசியமானதாகுமென்று அவர் மேலும் கூறினார். (ஐ-8)

## இராசி பலன்

**07.12.2004 (கார்த்திகை 22, செவ்வாய்க்கிழமை)**

தசமி பிற்பகல் 03.00 மணிவரை

அத்தம் முன்னிரவு 06.17 மணிவரை

இராகுகாலம் 03.17-4.47 மணிவரை

சுபநேரம் 10.47- 12.17 மணிவரை

விநாயக விரதம் 11ஆம் நாள்

- **மேடம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், புதிய பொருள் சேர்க்கை, சத்துரு ஜெயம்.
- **இடபம்** சொத்துக்களால் கவலை, காரிய இடையூறு, பணவிரயம், தாழ்ந்த சுபாவம்.
- **மிதுனம்** புதியதிருப்பம், பயந்த சுபாவம், முயற்சி தாமதம், தாய்வழி உறவு,
- **கடகம்** இனிய சம்பவம், கூட்டு முயற்சி, அநநியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை,
- **சிங்கம்** மதிப்புக் குறைவு, பொருள் விரயம், காரியதாமதம், அதிக வார்த்தை.
- **கன்னி** நண்பர்கள் உதவி, நல்ல முயற்சி, ஆழ்ந்தசிந்தை, பொருள் சேர்க்கை.
- **துலாம்** பிதா சிந்தை, உணர்ச்சி வசப் படுதல், காரிய அலைச்சல், பணவிரயம்.
- **விருச்சிகம்** தெய்வசிந்தை, மனமகிழ்ச்சி, பெருமையடைதல், காரியசித்தி.
- **தனுசு** கடின முயற்சி, நல்ல செய்தி, அதிகாரம், நண்பர்கள் உதவி.
- **மகரம்** ஆன்றோர் மதிப்பு, அச்சமான நிலை, கட்டுப்பாடு, திடீர் பயணம்.
- **கும்பம்** வீண் தொல்லை, போசன நன்மை, உடல்நலக்குறைவு, பிரயாணபயம்
- **மீனம்** அபூர்வ சந்திப்பு, பணவருவாய், கௌரவமான நிலை, பிரயாண நன்மை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது குறித்து

## ஓட்டோ உரிமையாளர்களுக்கு கோப்பாய் பொலிஸார் விளக்கம்

(கோண்டாவில்)

இருபாலை பிரதேச ஆட்டோ உரிமையாளர்களுக்கும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொலிஸாருக்குமிடையான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 3ஆம் திகதி கோப்பாய் பொலிஸ் நிலையத்தல் இடம்பெற்றுள்ளது.



கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடல் பல்வேறு குற்றச்செயல்களுக்கும் ஓட்டோக்கள் பயன்படுவது நிறுத்தப்படல் வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

இதில் ஓட்டோக்களை குற்றச்செயல் சம்பவங்களுக்குப் பயன்படுத்துவதை தவிர்த்தல், ஓட்டுநர்களுக்கான சட்டவிதிமுறைகள், ஓட்டோ தரிப்பிடம் சம்பந்தமான ஒழுக்கவிதிகள், ஓட்டுநர்களின் ஒழுக்க நடவடிக்கைகள் என்பன குறித்து ஓட்டோக்களின் உரிமையாளர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளன. (ப-130)

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் திருமாவளவன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

நாடாளுமன்றத்திற்கு கடந்த சனிக்கிழமை சென்ற தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு சுமார் 20 நிமிட நேரம் நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்திற்கு எதிராக தமிழ் நாட்டில் போராட்டங்களை நடத்தப் போவதாக திருமாவளவன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார். (க)

# பரிசளிப்பு விழாவும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழாவும் சாதனையாளர் விருதுவழங்கலும் மிகவும் கோலாகலமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் கல்லூரியில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக புரவலர், திருவுயர் இந்திரன் காராளசிங்கமும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ"ம், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் உறுப்பினர் செல்வி தி.பெரியதம்பியும், வலயக்கல்விப் பணிப்பாளர்களான, திருமதி றெஜினா இருதயநாதன், வே.தி.செல்வரட்ணம், வே.மகேந்திரன், வ.செல்வராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினராக தமிழழக் கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் புலவர் ம.பார்வதிநாதசிவமும் கலந்து கொள்கின்றனர்.

இவ் விழாவில் திருக்குறள் போட்டியில் ம்முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதுடன், யாழ்.மாவட்டத்திலும் மற்றும் தேசிய மட்டத்திலும் சாதனை புரிந்தவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப்பரிசளிப்பு விழாவில் க.பொ.த(உ/த) பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்று யாழ்.மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெறுபவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

**க.பொ.த.(உ/த) பரீட்சை -2004**

**உயிரியல் பிரிவு**

ச.சஜிந்தன் :-யா/புனித பரியோவான் கல்லூரி.

**கணிதப் பிரிவு**

ச.றமணன்:- யா/இந்துக் கல்லூரி.

**வர்த்தகப் பிரிவு**

அ.சரத்குமார் :- யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

**கலைப் பிரிவு**

கு.குருபரன் :- யா/இந்துக் கல்லூரி.

**க.பொ.த.(சா/த) பரீட்சை -2003**

கு.தர்சனா :- யா.வேம்படி மகளிர் கல்லூரி.

**தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை - 2004**

இ.பிரணவன் :- யா/இந்து ஆரம்பப் பாடசாலை.

இதேவேளை, தேசிய நிலைப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அவர்களின் பெயர் விபரம் வருமாறு:

**அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள்**

**வாசிப்பு 1**

த.கோகிலன் - யா/கரவெட்டி மாணிக்கவாசகன் வித்தியாலயம்.

**கவி தயாக்கம் (4)**

அ.அனுஷானி - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**இசை தனி (4)**

கு.ஜெகதீசன் - தெல்லிப்பழை யா/யூனியன் கல்லூரி.

**இசை தனி (5)**

வி.ஜீவிகா - தெல்லிப்பழை யா/யூனியன் கல்லூரி.

**பாடசாலை ரீதியாக**

**இசைகுழு (குழு 1)**

யா/வேம்படி மகளிர் கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

யா/ இந்து மகளிர் கல்லூரி.

**வில்லுப்பாட்டு (திறந்த போட்டி)**

யா/ யாழ்ப்பாணக்கல்லூரி.

**நாடகம் (திறந்த போட்டி)**

யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**தமிழ் அறிவு (வினாவிடை)**

யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி

இதேவேளை, தேசிய மட்டத்தில் விளையாட்டுத் துறையில குண்டெறிதல் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற கு.தர்சினி என்பவரையும் இவ் விழாவில் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

## வீதி சேதம்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியின் பல பகுதிகளும் சேதமடைந்த நிலையில் காணபபடுவதால் பயணிகள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கல்வியங்காட்டுச் சந்தியிலும புத்தூர் மற்றும் அச்சுவேலிப் பகுதிகளிலும் உள்ள இவ் வீதிப் பகுதியில் பாரிய பள்ளங்கள் காணப்படுவதால் அதில் மழை நீர்தேங்கி மேலும் சிரமத்தை ஏற்படுத்துகிறது. (ப-7,74)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், சர்வதேச கல்வி அகமும், பிரட்றிக் ஈபேக் மன்றமும் இணைந்து 'பெண் ஆசிரியர்களின் அந்தஸ்து' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடாத்தவுள்ளன.

இக் கருத்தரங்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்காக நடாத்தப்படவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 11 ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கும் இவ்வாறான கருத்தரங்கொன்று நடாத்தப்படவுள்ளதாக சங்கத்தின் யாழ்.மாவட்டச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்தார்.

இக் கருத்தரங்குகளில் சங்கத்தின் பொதுச்செயலாளர் மகாசிவம், சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் பஞ்சலிங்கம், தீவகவல தலைவர் பொ.அருணகிரிநாதன் ஆகியோர் வள ஆளணியினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ரு-19)


## சிறுவிளம்பரம்

### வீடு விற்பனைக்கு

186 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி, 1/2 ஏக்கர் காணியும் கல்வீடும் விற்பனைக்குண்டு.

T.P:- 0112-943994

(C/820)

### கடை விற்பனைக்குண்டு

மேகனா அச்சகத்தின் அருகில் இல: 236 K.K.S வீதி யாழ்ப்பாணம்

T.P:- 011-2725986

(9068)


## கசிப்பு சிக்கியது

(கோண்டாவில்)

உரும்பிராய்ப் பகுதியில் கசிபபு உற்பத்தி செய்யப்படுகின்றது எனக்கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து கோப்பாய நிலையைப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தலைமையிலான பொலிஸ் குழுவினர் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது உருமபிராய் கிழக்கு, ஊரெழுசென்மைக் கல்சேச் சடியிலுள்ள வீடொன்றிலிருந்து 3.92 றம் கசிப்பும், 3640 றம கோடாவும் மற்றும் மூலப் பொருட்களும், பரல்கள், உபகரணங்கள என்பன கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ப-130)

# தென்னிலங்கை மக்களிடையே சுயாட்சி குறித்து உரிய விளக்கமில்லை

(கொழும்பு)

தென்னிலங்கையில் வாழ்கின்ற பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் சமஷ்டி அல்லது கூட்டாச்சியினால் நாடு பிளவுபடும் என்ற அச்சம் 56 வருடங்களாக வேரூன்றிக் காணப்படுகின்றது.

இந்த அச்சத்தை நீக்குவதற்கு எமது நாட்டிலுள்ள பலமபொருந்திய பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த அரசியல் கட்சிகள் ஒரு முழுமையான முயற்சியை முன்னெடுக்கவில்லை என்றே நாம் கருதுகின்றோம் என ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கத்தின் பொருளாளர் சிவகுருநாதன் தெரிவித்தார்.

இலங்கையில் சமஷ்டி அமைப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஜனநாயக உரிமைகளைக்காப்பதற்கான இயக்கம் கொழும்பில் கடந்த இரண்டு நாட்களாக மாநாட்டினை நடாத்தியது.

இம் மாநாட்டின் முடிவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பெரும்பான்மை அரசியல் கட்சிகள் செய்யவேண்டிய வேலையை நாங்கள் பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று செய்து வருகிறோம். அடிமட்டத்திலுள்ள இளைஞர்கள் முதல் சகல தரப்பினருக்கும் இப்படியான ஒரு தேசிய மாநாட்டின் முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம்.

அனைவரும் இதற்கு உடன்பட்டு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள் எனவேதான், நாங்கள் இந்த மாநாட்டினை இரண்டு நாட்கள் கொழும்பில் நடாத்தினோம் எனக் குறிப்பிடடார். (ந-4)

# அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாக்கப்பட்ட சகல ஊடகவியலாளர்களுக்கும் நிவாரணம்

## பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த அரசின் காலத்தில் தகவல் ஊடாகத் துறையில், அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாக்கப்பட்ட சகலருக்கும், தகுந்த நிவாரணங்களைக் கொடுப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டு இது தொடர்பான இறுதி அறிக்கை பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படுமென பிரதி ஊடாகத்துறை அமைச்சர் சேகு. இஸ்ஸதீன் •தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கலுக்குள்ளான தகவல் ஊடகத்துறையினரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேல் முறையீடுகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு கடந்த மாதம் 24 ஆம் திகதி அரசியல் பழிவாங்கல் நிவாரணக்குழு அமைச்சின் செயலகத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது என்றும்.

அந்தக் கூட்டத்தில் நிவாரணக் குழுவுக்குக் கிடைத்த 200 விண்ணப்பங்களையும் பரிசீலித்து அவற்றை நீருபிப்பதற்கான ஆவணங்களைக் கோருவதற்கும் அவை கள் தொடர்பான நிருபணங்களைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

அரசியல் பழிவாங்கல் நிவாரணக்குழுவில் அமைச்சரின் மேலதிக செயலாளர் திருமதி காந்தி விஜேவிக்கிரம, சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி ஸ்ரீயாணி ஜயவர்ததண, உதவிச் செயலாளர் சுதீரா ஜயரட்ண எழுதுநர் ஹனசிகா, ஜீவானி ஆகியோர் இடம் பெறுகின்றனர். (க)





மதுகல்வி நிறுவனத்தில் அண்மையில் நடைபெற்ற கவின்கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட விகடகவி மு.திருநாவுக்கரசுடன் நிறுவன அதிபர் எஸ்.கே. கிருபாகரன் மற்றும் ஏனைய விருந்தினர்களையும், இதில் இடம்பெற்ற கலை நிகழ்வின் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கல்வியங்காடு செய்தியாளர்)

# எரிபொருட்களின் விலைகள்

# உலக சந்தையில் குறைந்தாலும் இலங்கையில் குறைவடையவில்லை

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலைகள் குறைவடைந்து வருகின்ற போதிலும் அதறகேற்ப இலங்கையில் அவற்றின் விலையை அரசாங்கம் குறைககவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

வரவு-செலவுத் திட்டவிவாதத்தின் போது நிதியமைச்சர் சரத் அமுனுகம நியாப்படுத்திய விடயங்கள் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஸ்திரமற்ற பொருளாதார முகாமைத்துவக் கொள்கையே பொருட்களின் விலை அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும். உலக சந்தையில் எரிபொருட்களின விலை அதிகரிப்பே இலங கையில் அவற்றின் விலை அதிகரிப்புக்கான காரணமெனக் கூறப்பட்டது.


ஆனால், தற்போது 22 சத வீதத்தால் உலக சந்தையில் எண்ணெய்யின் விலை குறைவடைந்துள்ளது. எனினும் அரசாங்கமோ இதன் பயனை மக்களுக்குக் கொடுக்கவில்லை.

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிக்குமாயின் இலங்கைக்கு மாத்திரமின்றி அயல்நாடுகளான இந்தியா, பங்களாதேஷ் நாடுகளிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தியாவின் பணவீக்கம் 6 வீதமாகவுள்ளது. இலங்கையின் பணவீக்கம் 14 வீதமாகும்.

உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலையானது 22 சத வீததால் குறைவடைந்த போதிலும், இலங்கையின் பணவீக்கம் மானது 14 வீதமாக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ந-8)

# சொத்தித் தலைக்கு சோடனை மாற்றி என்ன பயன்?

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளின் ஊடாக தமிழரின் தேச விடுதலைப் போராட்டத்தை படிப்படியாக அழித்து விடலாம் என்று சிங்களத் தலைமைகளுக்கே உரித்தான சூழ்ச்சி நயத்துடன் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றமை இரட்டை வேடம் தரித்து ஆடும் சமாதான நாடகத்தில் யுத்த காண்டம் அரங்கேறும் அறிகுறிகளை ஏற்படுத்தியுள்ளது.



## ஆயுதக் கொள்வனவு

இந்த இக்கட்டான நிலையை எதிர்கொள்ள இன்று சிங்கள அரசியல் கட்டமைப்பிலும் சரி இராணுவக் கட்டமைப்பிலும் சரி உறுதியான நிலைப்பாடு இல்லை. சவாரி வண்டி சறுக்கிய கதையாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு அல்லோல கல்லோலப்பட இன்னொரு பக்கத்தில் பிணத்துக்கு இரத்ததானம் செய்வதுபோல் யுத்தமொன்றுக்கு உளரீதியாக தயாரில்லாத- விருப்பமில்லாத - இராணுவத்தை பலிக்கடாக்களாக சமர்க்களத்தில் சவாரிவிடுவதற்கு விளையாட்டுப்பொருட்கள் போன்று ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்து வருகின்றது சந்திரிகா அரசு.

அதுவும் இந்த சமாதான காலத்தில் -



பட்ஜட்டில் பலகோடி ரூபா துண்டு விழுந்து நாடு இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள வேளையில் - அரசு தனது முப்படைகளுக்கும் கோடிக்கணக்கில் ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவித்து வருகின்கிறது.

அமெரிக்க இராணுவப் புலனாய்வு அதிகாரயும் இராணுவ ஆய்வாளருமான பிரயன் ப்ளொகட் இலங்கையின் படைக் கட்டமைப்புகள் குறித்த தனது ஆய்வுப் புத்தகத்தில் இவ்விடயம் பற்றி விலாவாரியாக விவரித்திருக்கிறார்.

சமாதான காலத்தில் இலங்கை வான் படைக்கு புதிதாக பத்து எம்.ஐ. - 25 ஹெலிககொப்டர்களை அரசு கொள்வனவு செய்துள்ளது. இதனால் தற்போது வான் படையிடம் உள்ள தாக்குதல் ஹெலிக் கொப்டர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்தள்ளது.

அத்துடன் காலால் படையின் பிரதான தேவையான ஆட்லறிகளின் எண்ணிக்கையை அரசு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. 2001 ஆம் ஆண்டில் 97 ஆட்லறிகளைக் கொண் டிருந்த இராணுவம் 2002 ஆம் ஆண்டில் அந்தத் தொகையை 157 ஆக அதிகரித்துள்ளது.

புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் தான் அரசு 40 யுத்த டாங்கிகளைக் கொள்வனவு செய்திருந்தது. ஆனால் அதன் பின்னரும் மேலதிகமாக 25 யுத்த டாங்கிகளை வாங்கி அடுக்கி விட்டிருக்கிறது.

படைக் கட்டமைப்புக்களுக்கான ஆயுத தளபாடக் கொள்வனவில் டாங்கிகள், ஆட்லறிகள், ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றில் அரசு தனது நீண்ட பாய்ச்சலைக் காட்டியிருக்கிறது என்கிறார் பிரயன்.

## படைக்கு ஆட்சேர்ப்பு

அடுத்ததாக படைகளின் ஆளணியை நோககினால் படைகளிலிருந்து தப்பி ஓடியவர்களை மீண்டும் படையில் சேர்ப்பதற்கு அரசு படாீத பாடுபட்டு வருகிறது. இராணுவ விட்டோடிகளுக்கு அரசு எத்தனையோ பொது மன்னப்புக்களை வழங்கியது.

ஆனால் கடந்த காலங்களில் யுத்தத்தின் கோரத்தை உணர்ந்த படையினர் கடைசி வரை மீள இணைந்து கொள்ளவில்லை. இதனால் அரசுக்கு இந்த முயற்சி படுதோல்வியையே அளித்தது. ஆனால் சமாதான காலமென்றவுடன் சண்டையிராது என்ற நம்பக்கையுடன் விசேட சலுகைகளை கண்டு மதி மயஙகி படைகளில் புதிதாக இணைய வந்தவர்களில் அரசு பாரிய அறுவடை கண்டிருக்கிறது. அதாவது யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் - 2002 ஆம் ஆண்டின் பின்னர் - இராணுவத்தின் எண்ணிக்கை 95 ஆயிரத்தில் இருந்து ஒரு லட்சத்து 18 ஆயிரமாக உயர்ந்திருக்கிறது.

ஆனால் புதிதாக ஆட்களைச் சேர்ப்பதில் அரசு வெற்றி காணவில்லை. தப்பி ஓடிய படையினர் திரும்பி வந்ததால்தான் படையினருக்கு இந்தத தொகை கிட்டியது என்றும் கூறப்படுகிறது.

கடற்படையைப் பொறுத்த வரை யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத் திடுவதற்கு முன்னர் தனது ஆட்சேர்ப்பை அது தொடங்கி மொத்த எண்ணிக்கையை 80 ஆயிரம் பேராக்க் கூட்டி 2003 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கையை 20 ஆயிரத்து 600 என்ற பாரிய வளர்ச்சியை எட்டியுள்ளது.

## அமெரிக்காவில் பயிற்சியும் கப்பல் கொள்வனவும்

இதேவேளை அமெரிக்காவிடம் இலங்கை அரசு வாங்கிய கரையோரக்காவல் ரோந்துக் கப்பல் அடுத்தமாதம் 9 ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வருவதாக புறப்படுகிறது. இந்தக் கப்பல் துருப்பினர் அமெரிக்காவிலேயே பயிற்சி பெற்று வருகிறார்கள். இது இவ்வாறிருக்க இந்தியாவுடன் புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் ஆயுத உதவி ஆகியவை உட்பட பல விடயங்களில் பலமான பாதுகாப்பு உதவிக்குப் பாலமிடத் தயாராகியுள்ளது இலங்கை அரசாங்கம்.

## யுத்தத்திற்கான ஆயத்தம்

மேற்குறிப்பிட்ட விடயங்களை ஆழமாக நோக்கினால் சில உண்மைகள் தெளிவாகத் தெரிகின்றன.

அதாவது, மூன்றுவருட காலமாக - யுத்தமின்றி அரசுப் படைகளுடன் அவற்றின் ஆயுத தளபாடங்களும் பயன்பாடு இன்றிக் கிடந்தன. இவற்றில் சில தற்போது பயன் படுத்தப்பட முடியாமல் போயிருக்கலாம். சில ஆயுதங்களால் எதிர்காலப் போர்க்கள வெற்றி களை பெறமுடியாமல் போகலாம். சில ஆயுதங்களின் அதே ரகமானவை புலிகளிடம் இருக்கலாம்.

ஆகவே இந்தக் குறைகளை ஒட்டு மொத்தமாக நிவீரத்தி செய்வதற்காக அரசு தற்போது யுத்தமொன்றுக்குத் தேவையான சகல ஆயுத தளபாடங்கள் மற்றும் இராணுவ உதவிகளை மொத்தமாகப் பெற்றுக் கொள்ள பலவழிகளை நாடியுள்ளது. அவற்றில் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்த முஸ்தீபும் அமெரிக்காவின் கப்பல் கொள்வனவும் முக்கிய காரணிகளாகும்.

ஏனெனில் அரசைப்போல புலிகளும் நீண்டகாலம் யுத்தத்தில் ஈடுபடவில்லை. ஆகவே அரசுக்கு உள்ள ஆயுத இருப்பு நெருக்கடி புலிகளுக்கும் இருக்க நியாயம் உண்டு. ஆகவே தன்னை இராணுவ ரீதியில் பலப்படுத்தும் அதேவேளை புலிகளுக்கான கடல் வழி ஆயுத விநியோகத்தை நிறுத்துவதற்கு கடலோரக் காவலைப் பலப்படுத்துவது அரசுக்கு இன்றியமையாத தேவை.

## இலங்கை - இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம்

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்துகொண்டால் இருநாடுகளும் புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம். புலிகளின் கடல்வழி ஆயுத விநியோகத்தைத் தடுத்து நிறுத்த இரு நாட்டு கடற்படையினரும் இணைந்து செயற்படலாம் என்று மனக்கணக்குப் போடுகிறது இலங்கை அரசு. இவ்வளவுக்கும் மேலதிகமாக அமெரிக்காவிலிருந்து கொள் முதலாகும் கப்பலும் கடற்படையுடன் இணைகிறது. ஆகவே இராணுவ ரீதியாக தன்னைப் பலப்படுத்தும் அதே கரிசனையை புலிகளை பலமிழக்கச் செய்ய வேண்டும் என்ற விடயத்திலும் சந்திரிகா



அரசு சரிசமனாகக் காட்டிவருகிறது.

## புலிகளின் பலம்

புலிகளது இராணுவ பலம் அரச படையினரை விட அதிகமாக இருப்பதாலேயே அரசு இந்த பலச் சமநிலையை முந்தும் நடவடிக்கையில் தீவிரமாக இறங்கியிருப்பதற்கு முக்கிய காரணம்.

ஏனெனில் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் கடைசியாக - 2001 ஆம் ஆண்டு - அக்கினிச் சுவாலை படை நடவடிக்கை 72 மணிநேரத்தில் புலிகளால் முறியடிக்கப்பட்டமையும் 2000 ஆம் ஆண்டு ஆனையிறவுப் படைத்தளத்தை புலிகள் கைப்பற்றியமையும் புலிகளது இராணுவ வளர்ச்சி குறித்து ஓயாத அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் தமது வான்படையின் தாக்குதல் வலுவால் புலிகளின் கள வெற்றிகளை நிறுத்துவது கடினம் என்ற யதார்த்தத்தையும் இடித்துக் கூறியுள்ளன.

ஆகவே தமிழ் மக்கள் மீது இராணுவத் தீர்வைத் திணித்துவிடலாம் என்ற சிங்கள ஆட்சியாளர்களின் நீண்டகால நப்பாசைக்கு வரலாற்றில் இடமில்லை என்பது வெளிப்படை உண்மை. இன்று இலங்கையின் அரசியல் இராணுவ கட்டமைப்புக்கள் இரண்டிலுமே விடுதலைப்புலிகளே முடிவெடுக்கும் சக்திகளாக உள்ளனர். இந்த யதார்த்தத்தை சிங்களத் தலைமைகள் உணர வேண்டும். அதற்கு தற்போது அவர்கள் மத்தியில் இனப்பிரச்சினைத் தீர்வு தமிழ் மக்களின் அபிலாஷைகள் ஆகியவை தொடர்பாக நிலவும் அடிப்படைக் கோட்பாட்டில் மாற்றம் ஏற்படவேண்டுமே தவிர சொத்தித் தலைக்கு சோடனையை மாற்றிப் பயனில்லை.

நன்றி:-இணையத்தளம்

---

# நாட்டை துண்டாட வைக்கும் புலிகளின் கோரிக்கையை ஒருபோதும் ஏற்கமுடியாது

## விமல் வீரவன்ச மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வை அமுல்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப் பேச்சு வார்த்தை நடத்தவேண்டுமென்ற சிந்தனைக்கு முழுநாடும் வந்துள்ள வேளையில் அதனை விடுதலைப் புலிகள் நிராகரித்திருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சமாதானத்தின் முக்கியத்துவம் மற்றும் போர்நிறுத்தம் போன்றவற்றின் அவசியத்தையும் புறந்தள்ளி அவற்றுக்கு முரணாகக் கடந்த அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக நடந்து கொண்டதன் விளைவாகவே நாங்கள் பதவிக்கு வர வேண்டியிருங்ககு.

முழுநாடுமே அதிகாரப் பகிர்வை அமுல்படுத்திப் பிரச்சினைக்குத தீர்வுகாண பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கும்போது விடுதலைப் புலிகளோ இடைக்கால நிர்வாக சபையைக் கோருகின்றனர்.

நாட்டைத் துண்டாடி எஞ்சியுள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதே அவர்களின் நோக்கம். ஆனால் புலிகளின் நிபந்தனைகளை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம் நாட்டைப் பாதுகாப்பதே நாட்டுப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நோக்கம் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

(க-5)

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

1

## 01. ஓர் ஆராய்ச்சி நூலின் ஆய்வு முறை

ஓர் ஆராய்ச்சிக்காரரோ யாரோ ஒரு ஆராய்ச்சிக் களத்திடை ஒன்றனைக் கூறம் புகுங்கால் அந்தக் கூறப்புகுந்த பொருளிலே முன்னர் யாரும் ஏதுங் கூறி இருக்கிறார்களா என்று பார்த்தல் வேண்டும். அங்ஙனம் பார்த்த அளவானே அதனில் தம் கருத்துக்கு ஒவ்வாமை இருப்பக் கண்டால் உடனே அவைகளை மறுத்து எழுதிவிட வேண்டும். அங்ஙனம் மறுத்த பின்னரே அதன் உண்மை இல்லையாய்விடும் அதன் பின்னர்தான் கைக்கண் உள்ள சான்றுகளை எடுத்துக்காட்டித்தான் சொல்ல எடுத்துக் கொண்ட பொருளை நிச்சயம் செய்தல் வேண்டும். அங்ஙனம் மறுக்க இயலாவிட்டால் ஒப்புக் கொண்டாக வேண்டும். பிறர் முன்னர் ஒன்று கூறி இருப்ப அப்பொருள் பற்றி பின் எழுதுபவர் பின்னொன்று கூறினால் பயில்வர் மலைப்பர். அவர்க்கு அதுசரியோ இது சரியோ என்று துணிதற்கு இயலாது இடர்படுவர். எழுதும் நூலின் நோக்கம் சித்தி பெறாது.

ஒரு பொருளிலே இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் கிடப்பனவாக இருக்கும். இவ்வாறிருத்தல் பயில்வார்க்குச் சிக்கலை விளைக்கும். முறைகள் இங்ஙனமாக அநேகமாக இவைகள் ஒன்றனையும் பின்பற்றாமல் பின்வந்த யா.வை .விகாரரும் யா.ச.காரரும் பற்பல நூற்றாண்டுகளுக்கு முற்படத் தோன்றிய கைலாயமாலை, வைபவமாலை நூல்களின் முடிபுகளுக்கு மாறாக ஒருமித்தும் தனித்தும் வேறு வேறு கோட்பாடான முடிபுகளைக்கூறி இருக்கிறார்கள். அங்ஙனம் செய்யுமவர் முன்னர் வெளியான நூல்களின் புரைபாட்டை எடுத்துக் காட்டி ஆதாரங்களுடன் அவை விலை இல்லாதொழிந்தவற்றை விளக்கவில்லை. தம்மனம் புத்திபோன போக்கின்படி தம் வாயொன்றினாலே தம் மாறுபட்ட கருத்தைக்கூறி இருக்கிறார்கள். இங்ஙனம் செய்வது பெரும் பிழையே. இன்னும் என்னையெனில் இவ்வாதார வைபவமாலை, கைலாயமாலை நூல்களில் சொல்லப்பட்ட சரித்திர சம்பவங்கள் முன்னர் நடந்து முடிந்தவை. அங்ஙனம் நடந்து முடிந்தவைகளைத் திரட்டித்தான் நூலாக வெளியிட்டிருக்கிறார்கள் .அவை யின்னாலே தோன்றுபவர்களுக்கு அறிவிக்கும் அவாவினாலே பரோபகாரமாக வெளியிடப்பட்டவைகளாகும்.

உதாரணமாக:- முன்னாள் மந்திரியாய் இருந்த மகாதேவா யாழ்ப்பாணம் ஆசுப்பத்திரிக்கு அத்திவாரக் கல்லிட்டார் என்று அவ்வாசுப்பத்திரி மதிலில் எழுதப்பட்டிருக்கிறது.

அவர் அவ்வாறு இடவில்லை என்று நாம் மறுக்க முடியுமா? மறுக்கச் சான்று கிடைக்குமா? இவ்வாறு யாழ்ப்பாண நூல் நிலையத்திலும் சாம்சபாபதி அத்திவாரக் கல்லிட்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது. அது பொய்யென்று நாம் மறுக்க முடியுமா? இவை பிறர் அறிதல் உபகாரம் கருதியல்லவா எழுதப்பட்டிருக்கு இவ்வாறு உபகாரம் கருதித்தான் வைபவ மாலை, கைலாயமாலை ஆதார நூல்களில் எழுதப்பட்டு வெளிவந்த பொருள்களும்மென்க அவைகளை மறுக்க அக்காலத்து வெளிவந்த மாறுப்பட்ட முடிவைக் கொண்ட ஆதாரங்கள் கிடைத்தாலல்லது நம் புத்தி ஆதாரமோ யூக ஆதாரமோ செல்லாது அவைகள் உண்மை யானால் மாறுப்பட்ட ஆதாரங்கள் கிடைக்கா. இவ்வாதார நூல்களை மரபு நூல்கள் என்று சொல்லுவார்கள். என்னையெனின் ஒன்றனில் சொல்லப்பட்டவைகளை எழுதப்பட்டவைகளைப் பார்த்து மற்றது எழுதப்பட்டு வருதலால் கைலாயமாலையிற் சொல்லப்பட்டவைகளை வைபவமாலை அப்படியே ஒப்புக்கொண்டு எழுதியிருப்பது இதற்கு உதாரணம் .பண்டைய சரிதத்திலே நாம் ஒன்று கூறப்புகுங்கால் அவ்வாதார நூல்களில் சொல்லப்பட்ட அன்றியும் அக்காலத்தவர் சொல்லி வைத்த வரம்பின்படி தான் போக வேண்டும் .அதற்காகத்தான் நடுகல்லைப் புதைபொருளை ஆராய்ச்சிக்காரர் தேடுவது மென்க .இவ்வாறு ஆராய்ச்சி வரம்பை முறையைப் பின்பற்றிப் போகாமல் தம் புத்தி போன போக்கின்படி போய்ப்பிறல் யாழ்ப்பாணச் சரித்திரத்திலே பல பிழைகளை யா.வை. விகாரர் யா.ச.காரர் விளைத்துவிட்டனர் .இவைகளை இந்நூலின் பிற இடங்களில் காணலாம்.

அன்றியும் யாழ்ப்பாணத்திலே வேறும் பாரிய கட்டிடங்கள் பாலங்கள் என்பவற்றில் இன்னார் இன்ன காலத்தில் இதனை இயற்றினார் என்று எழுதி இருக்கிறார்கள். இவை பொய்யாகவா எழுதப்பட்டிருக்கின்றன.

வைபவமாலை 8ஆம் நூற்றாண்டது. யா.வை.விகாரர் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவருக்கு வைபவமாலைக் கூற்றுக்கள் நன்கு தெரிந்துள்ளன. அவற்றுள் ஒன்று தமக்குடன்பாடில்லை என்றால் அதனைத் தக்க சான்று கொண்டு மறுத்துத் தமக்குடன்பாடான ஒன்றுக்கு ஏது காட்டிச் சொல்லவேண்டும். அங்ஙனம் இல்லாமல் முன்னைய கூற்று அப்படியே இருக்க பின்னொன்று சொன்னால் அதையேன் தள்ளவேண்டும் இதையேன் கொள்ள வேண்டும் என்று வாசகர் தெரியாராய் இரண்டனையுங்கொள்ளாது விடுவார் .இம்முறையாக எழுதுவது ஆராய்ச்சி வழுமுறை. இது சரியில்லை. வைபவமாலை அமைச்சர் கோயில் கட்டினான் என்றும் அவர்தான் தலைநகர் கட்டினான் என்றும் அவர்தான் விருந்துண்டான் என்றும் சொல்லியிருக்க இவர் அச்செயல்களை ஒரு காரணமும் காட்டி மறுக்காமல் இவைகளைச் செண்பகப்பெருமான் செய்தான் என்று சொல்லுகிறார். மறுக்கவும் சான்று காட்டவில்லை.கொள்ளவும் சான்று காட்டவில்லை. பிறமுடிபு சுட்டும் நன்சான்றுவேறு காணதவரை அவ்வுரைத்துணிபே உண்மையாகலாம் எனத்தடையில்லை என்க.என்னை கோயில் கட்டினது அமைச்சர் ஆனால் செண்பகப்பெருமாள் கட்டினான் என்று சான்று கிடைக்குமா அவ்வாறு விருந்துண்டது அமைச்சரானால் செண்பகப்பெருமாள் உண்டதை தெரிவிக்கச் சான்று கிடைக்குமா இன்னவாறே பிறவும் ஆகவே சான்று காட்டாதவைகள் உண்மையில்லை எனவும் அவை ஏற்றுக்கொள்ளக் கூடாதெனவும் விளங்குக. ஆகவே ஒரு உண்மையைக் கொள்ளவும் சான்று வேண்டும் தள்ளவும் சான்று வேண்டும் என்க.

இந்நூல் முதல் நூலுமன்று, வழிநூலுமன்று சார்புநூல் ஆகையால் முன்னர் அறிமுகம் செய்து வைத்த ஆதாரங்களை முழுத்துணையாகவும் பிறவாக வந்து அவ்வுண்மைகளை வற்புறுத்தும் பிறஆதாரங்களைப் பக்கத்துணையாகவும் கொண்டு இத் தமிழ் அரசர் காலத்தைப் பூரணமாக நிறைவு செய்யக் கருதுகிறோம். இஃது ஓர் சார்பு நூலாதல் பற்றி முந்து நூல்களாகவும் ஆதார நூல்களாகவும் இருக்கும் கைலாயமாலை, வைபவ மாலை களின் வழித்தாகவே நாம் செல்ல வேண்டும் என்னையெனில்.

“முன்னோர் மொழிபொருளேயன்றி யவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவோம் என்பதற்கும் முன்னோரின் வேறுநூல் செய்து மிலம் மேற்கோளில் என்பதற்கும் கூறு பழஞ் சூத்திரத்தின் கோள்” என்பதே இலக்கணமா கவிதை என்க.

முன்னோரின் வேறுநூல் செய்தல் முக்கியமாக இச் சரித்திர பாடத்துக் கொவ்வாது முன்னரே சரித்திர நிகழ்ச்சிகள் நிகழ்ந்து முடிந்த பின்னர் அவ்வச் சம்பவங்களையெல்லாந் திரட்டி, காலத்தாற் பின்வருவார்க்கு அறியவைக்க வேண்டும் என்னும் நன் நோக்கமே கொண்டு அக்காலத்துண்டான சான்றோர்கள் அவைகளை எழுதி வைத்திருக்கின்றனர் ஆகையால் என்க.

(தொடரும்)

# க.பொ.த(சா/த)பரீட்சையில் இம்முறை 501,000 மாணவர்கள் தோற்றவுள்ளனர்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கான சகல ஏற்பாடு களும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப்பரீட்சைக்காக 3 ஆயிரத்து 827 நிலையங்கள் நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ளன. ஏறத்தாழ 5இலட்சத்து ஆயிரம் மாணவர்கள் இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் மகிந்த விஜேயசிறி தெரிவித்துள்ளார்.

அரச கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலும் மாணவர்கள் பரீட்சை எழுதத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.மேற்படி பரீட்சை டிசம்பர் 23 வரை நடைபெறும். 30ஆயிரம் பரிசோதகர்கள் இதற்காக நியமிக்கபபட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 3இலட்சத்து 74 ஆயிரத்து 411 பாடசாலைகளில் பரீட்சைகள நடைபெறவுள்ளன.

இம்முறை ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 819 தனிப்பட்ட பரீட்சாத்திகள் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தொகை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இம்முறை ஏறக்குறைய சமனானது.

பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் 2கட்டங்களில் நடை பெறவுள்ளது. முதற்கட்டமாக ஜனவரி முதலாம் திகதி முதல் 10ஆம் திகதிவரையும் அடுத்த கட்டமாக ஜனவரி 29 முதல் பெப்ரவரி 6 ஆம் திகதி வரையும் விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் மேற்கொளளப்படவுள்ளன. (ற-6)

# போகல்லாகமவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் போகல்லாகம, கட்சியின் கோட்பாட்டிற்கு மாறாக அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டமை சட்ட விரோதமான செயல் என்று ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரி வித்திருக்கின்றார்.

இது தொடர்பில் போகல்லாகம மீது சட்ட ஒழுங்கு நடவடிக்கையெடுப்பதற்கு கட்சியின நிறைவேற்றுக் குழு தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-9)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவில், தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் யோ.லோஜிதன் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். அம் மாணவனுக்கு பழைய மாணவர் சங்கத் தலைவர் இ.இரத்தினதாசன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காண்க.


## விவாத அரங்கு -7

விடயம்

தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் கல்வியை சீர்படுத்துகின்றனவா? சீரழிக்கின்றனவா?

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004

நேரம்: 1மணி

## கணிதம் பகுதி I

ஆக்கம்: திரு.இ.நவரத்தினம்,
(ஓய்வுபெற்ற பிரதி அதிபர்)

(1) ஒரு கிலோ அரிசி ரூபா 42.50 படி 12 கிலோ அரிசி வாங்கிக்கொண்டு ரூபா 1000 கடைக்காரனிடம் கொடுத்தேன். அவன் மீதமாக எவ்வளவு பணம் கொடுப்பான்.

(2) சுருக்குக. $(2\frac{1}{3}+3\frac{1}{2})\div\frac{5}{12}$


(3) காரணிகாண்க. $\frac{1}{9}x^2-81$ (வர்க்க வித்தியாசத்தை பயன்படுத்துக)

(4) காரணிகளின் அறிவைப் பயன்படுத்திச் சுருக்குக.
$(x-y)(x+y)(x^2+y^2)(x^4+y^4)$

(5) பிரான்ஸ்சில் உள்ள குமார் என்பவர் தனது நண்பனுக்கு 120 யூரோ நாணயத்தை அனுப்பி வைத்தார். ஒரு யூரோவின் பெறுமதி ரூபா 125.60 எனக் கொண்டு நண்பன் பெறும் தொகையை இலங்கை நாணயத்தில் காண்க.

(6) $S=ut+\frac{1}{2}at^2$ எனும் சமன்பாட்டில் $u=30, t=5, a=4$ எனக்கொண்டு S ஐக் காண்க.

(7)




ABC என்பது ஒரு முக்கோணி.அதில் BO,CO என்பன $A\hat{B}C, A\hat{C}B$ என்பனவற்றின் இரு கூறாக்கிகள் $B\hat{O}C=150^0$ எனின் $B\hat{A}C$இன் அளவைக் காண்க.


(8) $\frac{2}{\sqrt{3}}$ ஐ விகிதமுறு பகுதி எண்ணாகத் தருக.

(9) மடக்கை வாய்பாடு பயன்படுத்தாமல் சுருக்குக. 3log2+3log5

(10) மாலவன் ஒரு வேலையை 3 நாட்களிலும் மலரவன் அவ்வேலையை 6 நாட்களிலும் செய்துமுடிப்பார்கள். இருவரும் ஒருமித்து அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்துமுடிப்பார்கள்.


(11) பின்வருவனவற்றில் எது விரிகோண முக்கோணியின் பக்கங்களாக அமையும். (i) 3cm, 4cm, 5cm (ii) 9cm, 12cm, 15cm (iii) 6cm, 7cm, 10cm (iv) 6cm, 8cm, 9cm

(12)




தரப்பட்ட உருவில் ABயின் நடுப்புள்ளி X.AC யின் நடுப்புள்ளி Y.BC=25cm எனின் XYஇன் அளவு யாது?

(13)





ABCD ஒரு செவ்வகம். DCஆனது E வரையும் நீட்டப்பட்டுள்ளது. Xஎன்பது CEஎன்னும் நேர்கோட்டில் உள்ள ஒரு புள்ளியாகும். முக்கோணி ABX இன் பரப்பு யாது?

(14) $\sqrt{2}=1.4, \sqrt{3}=1.7$ எனக் கொண்டு $\sqrt{128}+\sqrt{48}$ இன் பெறுமதியைக் காண்க.

(15) $y=(x-3)^2+4$ என்ற பரவளைவின் திரும்பல்புள்ளியின் ஆள்கூற்றைத் தருக.

(16)




தரப்பட்ட உருவில் AB என்பது தொடலி, A என்பது தொடுபுள்ளி, Oஎன்பது மையம். $A\hat{O}C=130^0$ எனின் $B\hat{A}C$ இன் அளவைக் காண்க.

(17) சுருக்குக. $\frac{4}{x+2}-\frac{3}{x-3}$

(18) தீர்க்குக. $(2x-3)(x+4)=0$

(19) ஒரு கூட்டல்விருத்தியின் nம் உறுப்பு 4n-3 என்னும் தொடர்பால் தரப்பட்டுள்ளது,
(i) இதன் முதல் மூன்று உறுப்புகளையும் தருக.
(ii) பொதுவித்தியாசம் யாது?

(20) 2000 ரூபாவுக்கு 15% தனி வட்டிப்படி 2 வருடம் 3 மாதத்திற்குரிய வட்டி யாது?

(21) $Sin\text{Ø}=\frac{24}{26}$ எனின் CosØ, Tan ஆகியவற்றைக் காண்க.

(22) $4x^2+\square+25y^2$ என்னும் நிறைவர்க்கக் கோவையில் நடு உறுப்பைக் காண்க.


(23) 24cm நீளம் 6cm அகலமான ஒரு செவ்வகத்தின் பரப்பானது ஒரு சதுரத்தின் பரப்புக்குச் சமமாகும். அச்சதுரத்தின் சுற்றளவு யாது?

(24) 10ரூபா பங்குகளை 15 ரூபாப்படி வாங்க ஒருவன் ரூபா 6000 செலவிட்டான். ஒருவருட முடிவில் அவனுக்கு ரூபா 240 பங்குலாபம் கிடைத்தது, என்ன சதவீத பங்குலாபம் கொடுக்கப்பட்டது.

(25) ரூபா 4000 விலை குறிக்கப்பட்ட பொருள் ஒன்று 12½ % கழிவுடன் விற்கப்படுகிறது. விற்றவிலை யாது?

(26) அரைவட்ட வடிவமான காட்போட் மட்டையின் விட்டம் 14cm எனின் அதன் சுற்றளவு யாது?

(27)




1cmகுறிப்பது 100mஎன்ற அளவிடையில் தரப்பட்ட உருவம் வரையப்பட்டுள்ளது. வரைபடத்தின் உண்மையான சுற்றளவைக் காண்க.

(28) சுருக்குக. $\frac{(a^3)^4 \times (a^3)^{-3}}{a^2}$

(29) இரண்டு நாணயங்கள் ஒருமித்து சுண்டப்படுகிறது.
(i) தோன்றக்கூடிய பேறுகளின் மாதிரிவெளியை இரட்டை அடைப்புக்குள் தருக.
(ii) ஒரு தலை, ஒரு பூ தோன்றுவதற்குரிய நிகழ்தகவு யாது?

(30) அடைப்பு நீக்கிச் சுருக்குக. $4(2x+3y)-3(x+2y)$

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பகுதி I இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01.வாற்று | 02.மேற்றோல்கலம் | 03.நிறமூர்த்தம் |
| 04.இஞ்சி | 05.$X_2O_3$ | 06.Mg |
| 07.பொக்சைற்று | 08.K,Na | 09.ஆகன் |
| 10.(4) | 11.NaoH | 12.1 A |
| 13.மின்மோட்டார் | 14.மேற்கூறிய யாவும் | 15.மேற்கூறிய யாவும் |
| 16.J/kg⁰C | 17.5.6g | 18.$\frac{28}{60}\times100\%$ |
| 19.abd சரியானவை | 20.மேற்கூறிய யாவும் | 21.2,3 சரியானவை |
| 22.Br,Hg | 23.மேற்கூறிய யாவும் | 24.$10^5$ |
| 25.0.25A | 26.Hcl | 27.$P_2O_3$ |
| 28.Au Ag | 29.Fe | 30.இடறு ஆளி |
| 31.நீர் | 32.ஜிப்சம் | 33.$Sio_2$ |
| 34.முழு அகத்தெறிப்பு | 35.தார் மெழுகு | 36.மேற்கூறிய யாவும் |
| 37.பித்தளை | 38.78% | 39.Ni |
| 40.$(C_6H_{10}O_5)$ | | |

க.பொ.த(சா/த) மாணவர்களே!
வலம்புரியில் தொடர்ந்து உங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் வெளிவரும்.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004

நேரம்: 3மணி

## விஞ்ஞானம் பகுதி II

ஆக்கம்: திருமதி. K.மகேந்திரன்,
வட்டு மத்திய கல்லூரி,
ஆசிரியர்.

(1) i) சூழற்றொகுதியொன்றில் உயிரினச் சாகியத்தைச் சேர்ந்த அங்கி வகைகள் எவை?

ii) சூழற்றொகுதியொன்றில் உயிரினச் சாகியத்துடன் தொடர்புடைய பௌதிகச் சூழற்காரணிகள் எவை?

iii) இயற்கைச் சூழற்றொகுதிகள் 2 தருக.

iv) செயற்கைச் சூழற்றொகுதிகள் 2 தருக.

v) இயற்கைச் சூழற்றொகுதி செயற்கைச் சூழற்றொகுதி இரண்டுக்குமிடையிலான வேறுபாடுகள் 4 தருக.

vi) சூழற்றொகுதியொன்றின் உயிரினச் சாகியத்தைச் சேர்ந்த அங்கிகளுக்கிடையிலான பல்வேறு போசனைத் தொடர்புகள் எவை?

vii) நீர் குறிப்பிட்ட போசனைத் தொடர்புகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

viii) சூழற்றொகுதியொன்றின் உயிரினச்சாகியத்தின் சமனிலை எங்ஙனம் பேணப்படுகிறது.

ix) சூழற்றொகுதியொன்றின் பௌதிகச் சூழலின் சமனிலை எங்ஙனம் பேணப்படுகிறது.

(2) i) இழையம் என்னும் பதத்தை விளக்குக.

ii) மழமழப்பான தசைக்கும் வன்கூட்டுத் தசைக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?

iii) நீர் குறிப்பிட்ட இரு தசைகளும் மனித உடலில் காணப்படும் இடங்களைத் தருக.

iv) நரம்புக் கலத்தின் 2 பிரதான பாகங்கள் எவை?

v) புலன் நரம்புநாரின் தொழில் யாது?

vi) இயக்க நரம்புநாரின் தொழில் யாது?

vii) தாவர இலையின் மேற்றோல் உரியலின் படம் வரைந்து பெயரிடுக.

viii) காழ் இழையத்தினதும் உரிய இழையத்தினதும் தொழில்களைத் தருக.

(3) அ.i) ஓமின் விதியை வாய்ப்புப் பார்ப்பதற்குத் தேவையான பொருட்கள் எவை?

ii) ஓமின் விதியை வாய்ப்புப் பார்ப்பதற்கு நீர் பயன்படுத்தும் பொருட்களைப் பயன்படுத்தி அமைக்கும் மின்சுற்றின் குறியீட்டுப் படம் வரைக.

iii) இப்பரிசோதனையில் எடுக்கப்படும் கணியங்கள் எவை?

iv) இக்கணியங்களைப் பயன்படுத்தி வரையப்படும் வரை படத்தை வரைந்து காட்டுக.


ஆ.i) மின்னோட்டத்தின் காந்த விளைவு பயன்படும் கருவிகள் 2 தருக.

ii) மின்னோட்டத்தின் வெப்பவிளைவு பயன்படும் கருவிகள் 2 தருக.

iii) மின்னோட்டத்தின் இரசாயன விளைவு பயன்படும் 2 சந்தர்ப்பங்கள் தருக.

iv) மின்மோட்டார் பயன்படும் கருவிகள் சில தருக.

(4)




A B C D ஆகியன ஒளிமுறிவை ஏற்படுத்தும் கண்ணாடியாலான பொருட்களாகும்.

i) A B C D ஐ பெயரிடுக.

ii) A பயன்படும் கருவிகள் 3 தருக.

iii) வெள்ளொளியை 7 நிறங்களாகப் பிரிக்க உதவும் கருவி எது?

iv) வெள்ளொளியிலுள்ள 7 நிறங்களையும் ஒழுங்காக எழுதுக.

v) CD ஆகியவற்றின் மீது படும் ஒளிக்கதிரின் முறிவை விளக்கும் கதிர்ப்படம் வரைக.

vi) குறும்பார்வை குறைபாட்டைத் திருத்தப் பயன்படுவது எது?

(5) i) பொறிமுறை நயம் வேகவிகிதம் வினைத்திறன் என்னும் பதங்களை விளக்குக.

ii) பொறிமுறை நயம் 3 உள்ள கப்பித் தொகுதியின் படம் வரைக.

iii) இக்கப்பித் தொகுதியைப் பயன்படுத்தி 2N சுமையை 1m தூரத் தூரத்தினூடாக உயர்த்த 3N எத்தனம் பிரயோகிக்கப்பட்டது. இக்கப்பித் தொகுதியின் திறனைக் கணிக்க.

iv) பொறியின் திறன் செய்முறையில் 100% ஆக இருப்பதில்லை. இதற்கான காரணம் யாது?

v) பொறியின் திறனைக் கூட்டுவதற்குக் கையாளப்படும் வழிமுறைகள் எவை?

vi) வளிமண்டல அமுக்கத்தை அளவிடப் பயன்படும் கருவி யாது?

vii) இக்கருவியின் படம் வரைந்து பெயரிடுக.

viii) இக் கருவியைப் பயன்படுத்தி எங்ஙனம் வளிமண்டல அமுக்கம் அளவிடப்படுகிறது.

(6) i) மனிதனின் குருதிச் சுற்றோட்டமானது ஏன் இரட்டைச் சுற்றோட்டம் என அழைக்கப்படுகிறது.

ii) இதயத்திலிருந்து ஒட்சிசன் செறிவு கூடிய குருதியை உடல் முழுவதும் கொண்டு செல்லும் குருதிக்கலன் எது?

iii) உடல் இழையங்களிலிருந்து ஒட்சிசன் செறிவு குறைந்த குருதியை இதயத்தை நோக்கிக் கொண்டுவரும் குருதிக் கலன்கள் எவை?

iv) நாடி நாளம் ஆகிய குருதிக் குழாய்களுக்கிடையிலான அமைப்பு ரீதியான வேறுபாடுகள் 2 தருக.

v) குருதிமயிர்த்துளைக் குழாய்களின் தொழில் யாது?

vi) ஈரல் வாயினாளமானது ஈரலுக்குள் செல்வதால் உள்ள அனுகூலங்கள் 2 தருக.

vii) நிணநீரின் தொழில்கள் 2 தருக.

(7) இலத்திரனியல் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) பின்வரும் இலத்திரனியல் துணைச் சாதனங்களின் புறத்தோற்றத்தையும் குறியீட்டையும் தருக.

அ.சீராகும் இருவாயி ஆ.ஒளிகாலும் இருவாயி
இ.கொள்ளளவி ஈ.திரான்சிஸ்ரர்

ii) சீராக்கும் இருவாயியின் பயன் யாது?

iii) திரான்சிஸ்ரரின் பயன்கள் எவை?

iv) கொள்ளளவியின் கொள்ளளவை அளவிடும் அலகு யாது?

v) 4 இருவாயிகளைப் பயன்படுத்தி ஆடலோட்ட மின்னோட்டத்தை நேரோட்ட மின்னோட்டமாக மாற்றுவதற்குரிய மின்சுற்றுப் படம் வரைக.

vi) தனி ஒரு இருவாயியைப் பயன்படுத்தி ஆடலோட்ட மின்னோட்டத்தைச் சீராக்கம் செய்யும்போது பெறப்படும் வரைபடம் வரைக. இத்தகைய சீராக்கம் எவ்வாறு அழைக்கப்படும்.

vii) 4 இருவாயிகளைப் பயன்படுத்தி ஆடலோட்ட மின் னோட்டத்தை நேரோட்ட மின்னோட்டமாக மாற்றும்போது பெறப்படும் வரைபடத்தை வரைக. இத்தகைய சீராக்கல் எவ்வாறு அழைக்கப்படும்.

(8) ஆவர்த்தன அட்டவணை தொடர்பாகப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) கூட்டம் i மூலகங்கள் எவை?

ii) கூட்டம் vii மூலகங்கள் எவை?

iii) விழுமிய வாயுக்கள் எவை?

iv) உயர்ந்த உருகுநிலை கொதிநிலை கொண்ட மூலகங்கள் எவை?

v) மகனீசியம் குளோரினுடன் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது? இச்சேர்வையின் இயல்புகள் 2 தருக.

vi) காபன் குளோரினுடன் சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது? இச்சேர்வையின் இயல்புகள் 2 தருக.

vii) ஆவர்த்தன அட்டவணையிலிருந்து எவற்றை அறிந்துகொள்ள முடியும்.

# பிணி தீர்க்கும் மிளகு

## மருத்துவ விளக்கம்

மருத்துவ மேதை டாக்டர் ஏ.ஆர்.என்.துரைராஜ்

மிளகு கொடியினைத்தைச் சார்ந்தது. இதன் இலை வெற்றிலையைப் போன்றது. ஆனால சிறியதாக இருக்கும். கொத்துக் கொத்தாகக் காய்க்கும். இந்த மிளகு காய்ந்தவுடன் பச்சை மணிகள் கறுத்து சுருக்கம்விழும் இதுவே காய்ச்சல் கண்டுபக்குவம் பெற்று கடைகளில் விற்கும மிளகு.

சுவையில் காரமும், வீரியம் உள்ளதாகவும் இருக்கும். மிளகு மிகச் சிறந்த மருந்து. எண்ணற்ற நோய்களைத் தீர்க்கும் தன்மையுடைய மூலிகை. இரத்தத்தை சுத்தப்படுத்தி, இரத்தவோட்டைத்தை மேம்படுத்துகிறது என்பது மருத்துவ மூதாதையர்களின் கருத்து.

இந்த மிளகில் நான்கு வகை இருககிறது. 1 குறு மிளகு (அ) நல்ல மிளகு **(Pepper)** 2.வால் மிளகு, 3 காட்டு மிளகு ,4.வெள்ளை மிளகு இன்னும் பல மிளகு வகைகள் உண்டு. இருந்தாலும நல்ல மிளகு (குறுமிளகு) தான் நோய் தீர்க்கும் மருந்து எனலாம்.

### தீரும் நோய்கள்

சுவாசகாசம், காய்ச்சல், தொணடைக் கம்மல், வாந்தி பேதி, விக்கல், புழுவெட்டு, மூல நோய், கருப்பை சம்பந்தமான நோய், அஜீரணம், வயிற்றுக் கோளாறுகள், கை-கால் குத்தல், குளிர் காய்ச்சல், முறைக் காய்சசல், தொழுநோய், வெண்குஷ்டம், கிராணி, கபம், வாயு, வாதரோகம், இரத்த மூலம், இருமல், சளி, காமாலை, காதுவலி, கண்காசம், கீல் வாதம், அடிபட்ட வீக்கம், பல்நோய், படர்தாமரை, தலைப்பேன் நீங்க, பசி எடுக்க மற்றும் எண்ணற்ற நோய்கள் நீக்கும் ஆற்றல் உடையது.

### உபயோகமும் செய்முறையும்

**சுவாசகாசம் முறைக் காய்ச்சல் நீங்க:**

கெட்டி மிளகு 10, நொச்சிக கொழுந்து ஒரு பிடி, மிளகாய் இலை ஒரு பிடி, இலவங்கம் 10, வெற்றிலை ஒரு பிடி, இவை அனைத்தையும் அம்மியில் வைத்து அரைத்து மை போலாக்கி வைத்து, அருநெல்லி அளவு உருண்டையாக்கி நிழலில் உலர்த்திக்கொண்டு, எடுத்து காலை-மாலை ஒரு உருண்டை வீதம சாப்பிட்டு வெந்நீர் அருந்தவும. நாளடைவில் ஆஸ்துமா, ஈளை, இழுப்பு, காய்ச்சல்கள சுவாசகாசம் யாவும் அடியோடு நீங்கும்.

### தொண்டை வலி, தொண்டைப்புண், வயிற்று வலி நீங்க:

தேவையான மிளகு எடுத்து இடிததுத்தூள் செய்து சுமார் 50 கிராம் அளவு எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் 500 மில்லி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து சுண்டக் காய்ச்சி எடுத்து வடிகட்டி வேளை ஒன்றுக்கு 30 மில்லி வீதம் தினம் 2-3 வேளை அருந்திவர குரல் கம்மல், தொண்டை வலி, தொண்டைப் புண், வயிற்றுவலி போன்ற நோய்கள் விரைவில் நீங்கும்.

தொணடை வலி இருந்தால், கொஞ்சம் மிளகு, ஓமம், உப்பு இவை மூன்றையும் சேர்த்து வாயில் போட்டு மென்றால் தொண்டை வலி குணமாகும். மருந்தென எண்ணி தினமும் மிளகு ரசம் வைத்து ஒரு டம்ளர் அளவு பருகி வந்தால் மேலே கண்ட எவ்வித நோயும் நம்மை அணுகாது.

மிளகு 5 கிராம், அபினி 5கிராம்,பெருங்காயம் 5கிராம் எடுத்து அம்மியில் வைத்துப் பசும்பால் சிறிதளவு விட்டுமை போல நன்கு அரைத்து, அரைத்ததை பயறளவு மாத்திரைகளாக உருட்டிக் கொண்டு கொலரா உள்ளவர்களுக்கு 1 மணிநேரத்துக்கு 1 மாத்திரை வீதம் உள்ளுக்கு சாப்பிடக் கொடுத்து சிறிது வெந்நீர் அருநதவும். நாளடைவில் கொலராவும் வாந்தி பேதியும் நிற்கும்.

மிளகு 50 கிராம், சோம்பு 75கிராம் எடுத்துத் தூள் செய்து ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் 350 கிராம் தேன்விட்டு அடுப்பில் வைத்து லேகிய பதமாகக் கிளறி எடுத்து வைத்துக்கொள்ளவும். தேவையான போது, இந்த லேகியத்தை எடுதது கோலியுருண்டை அளவு உருட்டி காலை -மாலை சாப்பிட்டுவர மூலநோய் நாளடைவில் ஒழியும்.

### கருப்பை சம்பந்தமான நோய்

கருப்பை நழுவுதல் அதாவது அடித்தள்ளல் என்ற நோய்க்கு மிளகு 50கிராம், கசகசா 50 கிராம், கேக்கு விதைத் தூள் 75 கிராம், ஓமம் 20 கிராம் ஆகிய அனைத்தையும் அம்மியில் வைத்து இடித்துத் தூள் செய்து வைத்துக்கொண்டு அதில் 250 கிராம் தேன் கலந்து அடுப்பில் வைத்து லேகிய பதமாக்கி கிண்டி வைத்துக் கொணடு கோலி அளவு காலை - மாலை சாப்பிட்டுவர கருப்பை நழுவும் நோய் சரிப்படும். அத்துடன் இம்மருந்தை மூல நோய்க்கும் சாப்பிட்டுவர குண ஆகும்.

சுக்கு 10 கிராம், மிளகு 10 கிராம் அரிசித்திப்பில் 10 கிராம், சீரகம 10 கிராம், ஏலம் 10 கிராம் இவை அனைத்தையும் ஒரு மண் சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து இளம் வறுவலாக வறுத்து எடுத்து அம்மியில் வைத்து இடித்து, இடித்த தூளை ஒரு மெல்லிய துணியில் கொட்டி வடிகட்டி, வடிகட்டிய தூளை எடுத்துக் கொண்டு அதில் வெள்ளைச் சர்க்கரை போதுமான அளவு சேர்த்து சேமித்துவைத்துக் கொள்ளவும். தேவையான போது 5 விரல் கொண்டு இத்தூளை எடுத்து இருவேளையும் காலை - மாலை சாப்பிட்டுக் கொஞ்சம் தண்ணீர் அருந்தவும் நாளடைவில் பசி இல்லாதவர்களுக்குப் பசி எடுக்கும்.

மிளகு, அதிமதுரம், கடுக்காய் இம்மூன்றையும் சம அளவாக எடுத்து இளவறுவலாய வறுத்து அம்மியில் வைதது்த் தூள் செய்து சேமித்து வைத்துக் கொணடு, ஒரு வேளைக்கு அரை கிராம் தூள் எடுத்துத் தேன் விட்டுக் குழைத்துச் சாப்பிட நாளடைவில் சூட்டு இருமல் நீங்கும்.

### நீரிழி நோய்க்கு

மிளகு, கொன்றைப்பட்டை, கல்மதம், ஆவாரந்துள் இவை நான்கையும் சம எடையாக ஒரு சுத்தமான மண்சட்டியில் போட்டுத் தண்ணீர்விட்டு எட்டுக் கொன்றாய் கஷாயம் காய்ச்சி வடிகட்டி அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

தேவையான அத்திக்காயை எடுத்துவந்து சுத்தம் பார்த்து ஒரு பாத்திரத்தில் போட்டு அரைப்படி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி, கஷாயம் வைத்து 2கிராம் மிளகைப் பொடித்து, கஷாயத்தில் போட்டுக் கொடுக்கவும், இவ்விதமாக இருவேளை கொடுக்க சீதபேதி நிவர்த்தியாகும்.

மிளகு, அரத்தை, அக்கிரகாரத், தேசாவரம், திப்பிலி, சுக்கு, கடுக்காய்த்தோல், ஓமம், இவைகள் சம எடை நம் உத்தேச அளவில் எடுத்துக் கொணடு அம்மியில் வைத்து நன்கு இடித்துத் தூள் செய்து, அதனுடன் பாதி சர்க்கரை சேர்த்துக் கலந்து சேமித்து வைத்துக் கொண்டு இத்தூளை 5 வரல் கொண்டு எடுத்து இருவேளை சாப்பிட்டு வரும் பட்சத்தில் நாளடைவில் புகை இருமல் நீங்கும்.

### அண்ட வாயுவுக்கு

மிளகு, இந்துப்பு, பெருங்காயம, பூண்டு, வசம்பு, சத்திச் சாரணைக் கிழங்கு, கழற்சிப் பருப்பு இவைகளை ஓர் உத்தேச நிறையாக எடுத்து அம்மியில் அல்லது உரலில் போட்டு இடித்து, இடித்ததை எடுத்து மறுபடியும் அம்மியில் வைத்து வெள்ளாட்டுப் பால் ஊற்றி அரைத்துச் சாப்பிட்டால் மேலே கண்ட அண்ட வாய்வு நோய் நீங்கி நலம் காணும்.

கரிசலாங்கண்ணி, தும்பை, அம்மான் பச்சரிசி வகைக்கு ஒரு பிடி எடுத்து அனைத்தையும் அம்மியில் வைத்து இடிததுச்சாறு பிழிந்து வைத்துக் கொண்டு அந்தச் சாற்றில் 12 மிளகு எடுத்து அரைத்து அதில போட்டு, வெள்ளாட்டுப் பாலாவது ஆவின் பாலாவது கால் படி விட்டுக் கலக்கி சர்க்கரை 4 கிராம் போட்டு அருந்தவும். இவ்விதமாக 6 நாள் அருந்திவரக் காமாலை நீங்கிச் சுகம் காணலாம்.

கொன்றைத் துளிர், புளியந்துளிர், மிளகு இம் மூன்றையும் சம அளவாக எடுத்து அம்மியில் வைத்து அரைத்துப் படர்தாமரையின் மேல் தடவிவர இரண்டு நாட்களில் ஆறிப் போகும்.

தேவையான மிளகை எடுத்து கருககித் தேங்காயெண்ணெயயில் அரைத்துக் கலக்கி எடுத்து சிரங்கின்மேல் தடவிவர குணமாகும்.

### மேகச் சூட்டுக்கு

அறுகம்வேர் ஒரு பிடி, மிளகு-21 இந்த இரண்டையும் எடுத்து ஓர் மண் சட்டியில் போட்டு அதற்குத் தகுந்த தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சி எடுத்து வடிகட்டி - அதில் பால், சர்க்கரை சேர்ததுக காபபிபோல் காலை- மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால மேகச் சூடு தணியும் மருந்தின வேகமும் தணியும்.

மிளகு 35கிராம், சுக்கு 35 கிராம், திப்பிலி 35கிராமம், ஓமம் 35 கிராம், சீரகம் 35கிராம், முத்தெருக்கன் செவி 35 கிராம் ஆகிய அனைத்தும அம்மி அல்லது உரலில் போட்டு இடித்துத் தூளாக்கி சேமித்து வைத்துக்கொணடு, ஒரு வேளைக்கு பாக்கு அளவு இத்தூளை எடுத்து வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும். இவ்விதமாகக் காலை-மாலை ஒரு வாரம் சாப்பிடவும் மற்றபடி கொஞ்சம் தூளை எடுத்து எருக்கம்பாலில் மைபோல அரைத்து மூல முளையில் தடவி வர விழுந்துபோகும். □

---

# இணுவிலில் பதற்றத்தை ஏற்படுத்திய கோஷ்டி மோதலுடன் தொடர்புள்ள மேலும் இருவர் விளக்க மறியலில்

இணுவில் - காரைக்கால் பகுதியில் இடம்பெற்றுவந்த கோஷ்டி மோதல்களை கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரும் முகமாக கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக இம் மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவரைக் கைதுசெய்துள்ளதுடன் மற்றும் ஒருவர் சரணடைந்துள்ளார்.

அண்மைக் காலமாக இணுவில், காரைக்கால் பகுதிகளில் இடம்பெற்றுவந்த இருகோஷ்டியினருக்கிடையான மோதல்களினால் அப்பகுதிகளில் உள்ள பொது உடமைகளுக்கும், தனியார் உடமைகளுக்கும் பெரும் சேதங்கள் ஏற்பட்டதுடன் மக்களிடையே பரபரப்பும் பீதியும் நிலவிவந்ததுடன் இயல்பு நிலையும் பாதிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து, கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் மேற்கொண்ட துரிதநடவடிக்கைகள் மூலம் 6 பேர் உடனடியாகக் கைது செய்யப்பட்டிருந்தனர். எனினும் இம் மோதல்களுடன் தொடர்புடைய மேலும் இருவரைப் பொலிஸார் தேடி வந்தனர்.

இவ்விருவர்களில் ஒருவர் புன்னாலைக் கட்டுவன் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். மற்றுமொருவர் தானாகவே சென்று பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இதனையடுத்து அப் பகுதியில் மோதல் நிலைமைகள் தணிந்து இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது. (ப-130)

### திருட்டு

(கோண்டாவில்)

கல்வியங்காட்டுப் பகுதியில் சி.50 ரக கொண்டா மோட்டார் சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளது.

இம் மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் மோட்டார் சைக்கிளை கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள மதுபானக் கடை ஒன்றின் முன்னால் நிறுத்தி விட்டிருந்த வேளையே இது திருடப்பட்டுள்ளது. (ப-130)

---

# நூலக அபிவிருத்தி குறித்த செயலமர்வு

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட நூலக அபிவிருத்தி பொபலெம் செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 16,17ஆம் திகதிகளில் யாழ்.இந்து மகளிர்கல்லூரியில் உளள ஆசிரியர் வளநிலையத்தில் காலை 8.00 மணிதொடர்ககம் பி.ப.5.மணி வரை நடைபெறவுள்ளது.

இதறகாகத் தெரிவு செய்யபபட்ட பாடசாலைகளின் ஆசிரிய நூலகர்கள் மற்றும் பொப்லெம் செயற்றிட்டத்தின் கீழ் செயற்படவுள்ள நான்காம் ஆண்டு மாணவர்களுககு ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோரை இச் செயலமர்வில் தவாறு கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்வப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ற-19)

---

# ஆளுங்கட்சியினரின் வைபவத்தில் த.தே.கூட்டமைப்பு எம்.பிக்கள் ?

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று 10 வருடங்கள் பு,ர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட எதிர்க்கட்சியைச் சேர்ந்த 3 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

இரா.சம்பந்தன மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோரே கலந்து கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிவிவகார அமைச்சும் தகவல்துறை அமைச்சும் இணைந்து பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்த இந்த வைபவத்தில் இந்திய எரிபெருாள் மற்றும் மின சக்தித்துறை அமைச்சர் மணி சங்கர் ஐயர் அதிதியாகக் கலந்து கொணடு சிறப்புரையாற்றினார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட அமைச்சர்களும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் சபாநாயகர் என்ற ரீதியில் வி.ஜே.மு.லொக்கு பண்டார (ஐ.தே.க.) கலந்து கொண்டார்.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை ஸ்ரீ.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார். வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வரவேற்புரை நிகழ்த்திய இந்த வைபவத்தில் தகவல்துறை மற்றும் துறைமுகம், விமான நிலைய அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீர நன்றியுரை நிகழ்த்தினார்.

(க)

# காஞ்சி சங்கர மடமும்

② (நேற்றைய தொடர்ச்சி)

நோக்கம் எதுவானாலும் கைது தவறு என ஆகிவிடாது. கொலைக் குற்றம் இருந்தால் சங்கராச்சாரியானா லும் சட்டப்படி கைது செய்யப்படலாம் என்ற முன்னுதாரணத்தை ஏற்படுத்தி யது பாராட்டத்தக்கது. முஸ்லிம்களை திருப்திப்படுத்துவதற்கு என்று பி.ஜே. பி.யினர் சொல்லுவது முஸ்லிம்களை இழிவுபடுத்துவதாகும். இந்து சாமியார் மீது நடவடிக்கை எடுத்தால் முஸ்லிம் கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று சொல் லுவதே கேவலமானதாகும்.

## ஜெயலலிதாவின் அதிரடி

ஜெயலலிதாவுக்கும் சங்கர மடத் துக்கும் இடையே தனிப்பட்ட கொடுக் கல் வாங்கல்கள் இருந்தன என்பதைத் தான் பத்திரிகைச் செய்திகள் எழுப்



பும் சந்தேகம் என்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்டு சொல்லுகிறார் கரு ணாநிதி. தான் ஒரு போதும் செய்ய வாய்ப்பே இல்லாத ஒரு செயலைச் செய்து ஜெயலலிதா மக்கள் ஆதரவை பெற்றுவிட்டது, கருணாநிதிக்கு அடுத்த தேர்தல் கவலையை ஏற்படுத்தி விட் டது. அதனால் இப்படி குழப்பமான அறிக்கைகள் வெளியிடத் தொடங்கி விட்டார். கொடுக்கல் வாங்கல்கள் இருந் திருநதால் அவை ஆதாரங்களுடன் அம் பலப்படுத்தப்பட்டு அதற்கு தனி நடவ டிக்கை வேண்டும் என்று கோரலாம்.

ஒரு வாதத்துக்காக ஜெயேந்திர ருக்கும், ஜெயலலிதாவுக்கும் இடையில் பணத் தகராறு தான் பின்னணி என்றே வைதது்க் கொள்வோம். அப்படியானால், இப்படி ஒரு கொலை வழக்கில் ஜெயேந திரரும் சம்பந்தப்பட்டிருப்பது ஜெயல லிதாவுக்குத் தெரியவந்ததும், உடன டியாக அவரை அழைத்து இன்னும் மிரட்டி பிளாக்மெயில் செய்திருக் கலாமே. பழைய பாக்கியையும் கொடுத் துவிடு. இந்தக் கொலை விவகாரம் வெளியில் வராமல் இருக்க இன்னும் சேர்த்துக் கொடு என்று பேரம் பேசியி ருக்கலாமே. அவரும் சந்தோஷமாகக் கொடுத்துவிட்டு வந்திருப்பாரே. அரசு அதிகாரம் கையில் இருப்பதால் வழக்கை ஜெயேந்திரர் சம்பந்தமே இல்லாமல் சுலபமாக மூடிவிட்டுப் போகலாமே. அப்படி எதுவும் செய்யாமல், பகிரங்க மாக கைதுக்கு உத்தரவிட்டு, கைதின் மூலம், சங்கரமடம் பற்றி இருந்த பொய்யான பிம்பத்தை உடைக்க உதவி யிருப்பதற்காக நிச்சயம் ஜெயலலி தாவைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஜெயேந்திரர் கொடுக்கல் வாங்கலில் வழுக்கியிருந்தால், அவரை மிரட்ட பொய் வழக்கும் போடப்பட்டிருக்கலாம அல்லவா? ஒப்புதல் வாக்குமூலம் அளித்த இருவர் பல்டி அடித்திருப்ப தால், அவர்களின் வாக்குமூல அடிப்ப டையில் ஜெயேந்திரர் மீது வைத்த குற றச்சாட்டே செல்லாததாகி விட்டதா? இல்லை. திரை மறைவு பேரத்தில் ஒருவர சிக்கியிருந்தால் அவரிடமிருந்து அதிகம் கறக்க வாய்ப்புக் கிடைக்கும் போது அதை நழுவ விடுவார்களா என்ன? பகிரங்கமாக அவரை இழிவுபடுத்து வதைவிட அது அதிகலாபமானது.

## கூலிப்படையினரின் பணி

இந்த வழக்கு வேறு நோக்கங்க ளுக்காக பொய்யாக போடப்பட்டது என்பதற்கு ஆதாரம் இல்லை. வேறு தக ராறு இருந்ததால், இதை மூடி மறைக்க உதவி செய்யவில்லை என்று வேண்டு மானால் அதிகபட்சமாக சொல்லலாம்.

எனினும் இவை எல்லாம் வெறும் யூகங்களே. கதிரவன் வாக்குமூலம் தர 24 மணி நேர அவகாசம் தரப்பட்டு அதன் பிறகு பொலிஸ் இல்லாமல் தனியே நடுவரிடம் இரண்டு மணிநேரம் வாக்குமூலம் அளித்தபோதே தன் ன பொலிஸ் துன்புறுத்தியதாக சொல்லி யிருக்க முடியும். சொல்லவில்லை. பின்னர் சொல்லுவதுதான் உள்நோக்க முடையது என்றும் நீதிமன்றம் கருத




லாம். தவிர ஒரு வழக்கில் வாக்கு மூலங்கள் மட்டுமே சாட்சியங்கள் அல்ல. வேறு ஆதாரங்களும் உண்டு. அவை வழக்கு விசாரணையின்போது தான் ஏற்கத்தக்கவையா அல்லவா என்று தீர் மானிக்கப்படும்.

கூலிப்படையினரின் தலைவன் என்று சொல்லப்படும் அப்பு தி.மு.க பிரமுகருக்கு நெருக்கமானவர். சங்கரராமனுக்கும் ஜெயேந்திரருக்கும் உள்ள விரோதத் தைப் பயன்படுத்தி வேறு யாரோ ஏன் இந்தக் கொலைக்கு உத்தரவிட்டு, சங்கர மடத்தை இதன் மூலம் இழிவு படுத்தி ஒழித்துக் கட்ட முயற்சித்தி ருக்கக் கூடாது? என்பது அறிவுஜீ விகளின் குதர்க்கம் அவ்வளவுதான்.

ஜெயேந்திரர் சொல்லியதன் பேரில் சங்கரராமனைக் கொல்ல என் தலை வர் அப்பு என்னை பணித்தார் என்பது கதிரவன் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம். இது கட்டாயப்படுத்தப்பட்டது என்றால், முழுவதும் தவறாகிவிடுமல் லவா. ஆனால் குருமூர்த்தி தனக்கு வசதியாக அதில் ஜெயேந்திரர் பற்றி யது மட்டும் கட்டாயப்படுத்தப்பட்டது என்று எடுத்துக் கொள்கிறார். அதே சமயம் அப்பு சொல்லி கதிரவன்தான் கொலை செய்தது என்பதை மட்டும் பொலிஸ கட்டாயத்தில் கதிரவன் சொன் னதாக குருமூர்த்தி கருதவில்லை. அதெப்படி முடியும்?

தாங்கள் கொலை செய்துவிட்டு அதற்கு இன்னொருவர் மீது பழி போடு வது என்பது மத வெறியர்களுக்கு புதியதல்ல. ஸ்டேன்ஸ் பாதிரியார் எரிக் கப்பட்டாலும், குஜராததில் முஸ்லிம் கள் வேட்டையாடப்பட்டாலும், பாபர் மசூதி இடிக்கப்பட்டாலும் எதுவுமே தங்கள் அமைப்பு திட்டமிட்டு நிறை வேற்றியவை என்று அவர்கள் எப்போது ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்? எல் லாமே மக்கள் தன்னெழுச்சியாக உணர்ச் சிவசப்பட்டு செய்தது என்றுதானே சொல்லிவந்தார்கள்?

## சட்டமும் நீதியும்

ஜெயேந்திரர் கைது சட்டத்தின் முன் எல்லாரும் சமம் என்பதைக் காட்டி யிருக்கிறது. நீதித்துறையும் அதை நிருபிக்க வேண்டும். கடந்த காலத்தில் சங்கர மடத்துக்கு சென்று தொழுத எந்த உயர் நீதிமன்ற நீதிபதியோ, உச்ச நீதிமன்ற நீதிபதியோ இந்த வழக்கை விசாரிக்கக்கூடாது.

ஜெயேந்திரர் மட்டும் தனியாக மடத் தில் எவர் உதவியும் இல்லாமல் இந் தக் கொலைக்கு ஏற்பாடு செய்தார் என்று வழக்கு நடத்தினால் அது பலவீனமாகி விடும். அது நம்பத் தகுந்ததும் அல்ல. அவருக்கு இதில் ஒத்துழைத்த இதர மட நிர்வாகிகள், ஊழியர்கள் என்று பலர இருக்க முடியும். அது யாராயிருந் தாலும் விஜயேந்திரர் ஆனாலும் அவர் தம்பி ஆனாலும், கடை நிலை ஊழியர் ஆனாலும் கைது செய்தால்தான் நீதி முழுமையாகும்.

கொலையாளிகளுக்கு 50 லட்சம் ரூபாய் வரை கூலி பேசப்பட்டு கணிசமான பணம் தரப்பட்டதாகவும் வழக்கில் சொல் லப்பட்டிருக்கிறது. இப்படிப் பெரும் தொகையை கணக்கில் காட்ட முடியாத விஷயததுக் கெல்லாம் செலவு செய்யும் நிலையில் அந்த மடம் இருந்தால், அதன் நிதி நிர வாகங்கள் பற்றியும் விசாரித்தாக வேண் டிய சட்டத் தேவை இருக்கிறது. மடத்துக்கு இந்து அற நிலையத்துறை யிலிருந்து ஒரு சிறப்பு அதிகாரியை நிய மித்து, மடத்தின் கடந்தகால நிதி விவ காரங்களை விசாரிபபதும் அவசிய மாகும்.

## அரசியல் வாதிகளின் நடவடிக்கைகள்

சங்கர மடத்தின் அரசுத்துறை தரகர் களில் ஒருவர் வெங்கடராமன் காங் கிரஸ் கட்சியினர் அவர் செல்லுமிட மெல்லாம் அவருக்கு கறுப்புக் கொடி காட்ட வேண்டும். வாழ்க்கையில் சுமார் அறுபது எழுபது ஆண்டுகள் காங்கிர ஸில் பலவிதமான பதவி சுகங்கள்ள அனுபவித்துவிட்டு, இப்போ [illegible] சங்கராச் சாரிக்காக, காங்கிரஸின் [illegible] நான எதிரி பி.ஜே.பி நடத்திய டெல்லிப் போராட்டத் தில் கலந்துகொண்டிருக்கிறார். இவர் குடியரசுத்தலைவராக இருந்தபோது ஓட்டு போடுவதில்லை. ஜனாதிபதி எந்த சார்பும் அற்றவராக இருக்க வேண்டும் என்பதனாலே இவர் ஓட்டு போடுவ தில்லை. ஜனாதிபதியானதும் இவருடைய உண்மையான சார்பு எதனுடன் என்று காட்டியருக்கிறார். பாபர் மசூதி இடிப்பு, குஜராத் மத வெறியாட்டம் இவை எதுவும் இவர் மனதை உலுக்கி தெருவுக்கு வரவழைத்ததில்லை. ஜெயேந்திரர் கைதுக் காக இவர் தெருவுக்கு வந்திருக்கிறார்.

வழக்கம் போல கலைஞர் கருணா நிதியின் நடவடிக்கையைப் பார்ப்போம். மாலுமி சரியில்லை என்றால் மாலு மியை மாற்ற வேண்டும். கப்பலைக் கைவிடக் கூடாது. காஞ்சி மடம் காப்பாற் றப்பட வேண்டும் என்கிறார் இவர். எதற்காக அந்தக் கப்பலைக் காப்பாற்ற வேண்டும்? அது ஒரு போர்க்கப்பல். சாதி வெறி பிடித்தவர்களின் சார்பாக, சாதாரண மக்கள் மீது, தலித்துகள் மீது, பெண் கள் மீது வர்ணாசிரமத்தை திணிக் கும் போர்க்கப்பல். இந்த யுத்தத்தில் அதன் தளபதி பலவீனமடைந்திருக் கும்போது கப்பலை அழிப்பதுதான் யுத்த தர்மம். எதிரியின் கப்பல் மீது இவருக்கு ஏன் நேசம்?... மடத்தின் நிதி நிர்வாகம்

# ஜெயேந்திரர் விவகாரமும்

பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முதலில் தீர்த்துக்கட் டியிருப்பதும் தி.மு.கதான். ஜெயேந் திரர் கைதான மறுநாள் மடத்தில் மத்திய வருமானவரி அதிகாரிகள் சோதனை என்று ஒரு செய்தி வெளியா யிற்று. உடனடியாக அதை மறுத்து



டெல்லியிலிருந்து அறிக்கை விடுத்தது அங்குள்ள அந்தத்துறையின் தி.மு.க அமைச்சர்தான். கூலிப்படைக்கு பெரும் தொகையை மடம் ஏற்பாடு செய்ததாக வழக்கு இருக்கும் போது, வருமான வரித்துறை சோதனையிடுவதுதானே நியாயம்?

ஜெயலலிதாவுக்கும் ஜெயேந்திரருக் கும் பண பேரங்கள் இருந்ததாக பத்தி ரிகை செய்திகள் வந்ததை சுட்டிககாட்டி உள்நோக்கம் இருக்கலாம் என்று அறிக்கை விடும் கலைஞர், அந்த பண பேரம் என்ன என்று மடத்தின் நிதி விவகாரங் களை சோதனையிட ஏன் தன அமைச் சரைக் கேட்கவில்லை? சோதனை இல்லை என்றுதானே அறிவிக்கிறார்கள்.

வருமானவரி சோதனை இல்லை என்று தி.மு.க மத்திய அமைச்சர் அறிவித்ததில், கலைஞர் கருணாநிதிக்கும் ஏதோ உள்நோக கம் இருப்பது போன்று தெரிகிறது. உள் நோக்கம் எல்லாருக்குமே இருக்கலாம். கூலிப்படையின் தலைவன் தி.மு.க பிர முகர்களுடன் தொடர்புடையவர் என்று செய்திகள் வரும்போது, தங்கள் பிரமுகர் கள், தொடர்புகளைக காப்பாற்றுவதற் காக தேவைப்படடால் சேர்த்து ஜெயேந் திரரையும் கூடக் காப்பாற்ற முயற்சிக்க லாமே. எனவே ஒவ்வொருவருடைய அறி விப்புகள், பேசசுக்கள், செயல்கள் எல்லா வற்றையும் சங்கராச்சாரி விஷயத்தில் நுணுக்க மாகக் கவனிக்க வேண்டியி ருக்கிறது.

வழக்கு விவகாரங்களை இப்போது பரபரப்பானவையாகச் செய்திகளாக எல்லா புலனாய்வு பத்திரிகைகளும் வெளியிட் டாலும் ஒட்டு மொத்தமாக காஞ்சி மடத் தின் நற்பெயரைக் காப்பாற்ற வேண்



டும் என்ற தொனி தூக்கலாகி வருகிறது. சங்கரமடம் என்ற அடிப்படை அமைப்பைப் பற்றி இப்போது யார் என்ன கருத்தைச் சொல்லுகிறார்கள் என்பது தனியே கவனிககப்பட வேண்டியதாகும். அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற குரல் எங் கிருந்தெல்லாம் வருகிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

சங்கரமடத்தின் ஏராளமான சொத் துக்களைக் காப்பாற்ற வேண்டும். அதன் மருத்துவமனைகள் இப்போது பணக் காரர்களுக்கானவையாக இருக்கின்றன. அவற்றை ஏழைகளுக்கானதாக்க வேண் டும். வேத பாடசாலை போன்ற விஷயங் களை இந்து அறநிலையத்துறையே பார்த்துக் கொள்ளலாம்.

எனவே மடமே தேவையில்லை. தொடர்ந்து அதன் சொத்துக்களை விஜ யேநதிரரும் அவர் தம்பி, மச்சினர் போன்ற குடும்பத்தினரும் முறைகேடு செய்ய விடாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## குற்றவாளிகள் கைது

இந்நிலையில் சங்கரராமன் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியான கூலிப்படைத் தலைவன் அப்பு ஆந்திர மாநிலம் சித்தூர் அருகே கைதுசெய் யப்பட்டுள்ளான்.

சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டதை யடுத்து, அப்பு தொடர்ந்து தலைமறை வாக இருந்து வந்தான். அவனைப் பிடிக்க தனிப்படைகள் அமைக்கப்பட்டன. இந்நிலையில் 7 பேர் கொண்ட தனிப் படை பொலிஸார் தமிழக அரசின் தனி விமானம் மூலம் ஹைதராபாத் புறப்பட்டுச் சென்றனர். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அப்பு குறித்த மிக முக்கிய தகவல் கிடைத் துள்ள தாலேயே தனிப்படையினர் தனி விமானம் மூலம் விரைந்தனர்.

இப்போது அப்பு கைது செய்யப்பட் டிருப்பது பொலிஸாரால் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆந்திர மாநிலம் சித்தூர் அருகே புத்தூர் என்ற இடத்தில் அவ னைப் பொலிஸார் கைதுசெய்தனர். அப்பு இப்போது ஹைதராபாத் கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

இதறகிடையே சங்கரராமன் கொலை வழக்கில் தேடப்பட்டுவரும் சுப்பிரமணி யத்தை தமிழகப் பொலிஸ் படை டெல்லி யில் வைத்து கைதுசெய்துள்ளதாக செய் திகள் பரவியுள்ளன.

ஜெயேந்திரருக்கு மிகவும் நெருக்க மானவராக இருந்தவர் ரவி சுப்பிர மணியம். சங்கரமடம் சார்பிலான ஒப் பநதங்கள் அனைத்தும் ரவி சுப்பிரமணி

நன்றி இணையத்தளம்

யத்திற்கே கொடுக்கப்படுவது வழக்கம். சங்கரராமனைக் கொலை செய்ய கூலிப் படையை ஏற்பாடு செய்தவர் இவர்தான். சங்கராச்சாரியார் உத்தரவுப்படி கட்டடம் கட்ட கொடுக்கப்பட்ட 65இலட்சம் ரூபா வில் 15 இலட்சத்தை கொலையாளிகளுக்கு இவர் கொடுத்துள்ளார். தலை மறைவாகி விட்ட ரவி சுப்பிரமணியத்தைப் பிடிகக பொலிஸ படை அமைக்கப்பட்டு, தீவிர தேடுதல் வேட்டை நடந்தது டெல்லியில் அவர் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்ற ஒரு பொலிஸ்படை, ரவி சுப்பிரமணியத்தை கைது செய்தனர் எனத் தகவலகள் வெளி வருகின்றன. இதை காவல்துறை வட் டாரங்கள் மறுக்கவோ, உறுதி செய் யவோ மறுத்துவிட்டன.



சீனாவின் சான்யா நகரில் உலக அழகிப் போட்டி நடந்து வருகிறது. தேவலோகத்தில் ரம்பா, ஊர்வசி, மேனகா ஆகிய நாட்டிய தேவதைகள் இருப்பதாகப் புராணங்களில் படித்திருப்போம். ஆனால் இவர்களை மிஞ்சக் கூடிய வகையில் பூலோக தேவதைகளும் இருக்கின்றனர்.

இந்நிகழ்ச்சிக்காக சீன நாட்டிய அழகிகள் நடன ஒத்திகையில் ஈடுபட்டனர். அப்போது அவர்கள் ரம்பா, ஊர்வசியை மிஞ்சும் வகையில் நாட்டிய அபிநயங்கள் செய்துகாட்டி பார்வையாளர்களை பிரமிக்கச்செய்தனர். அந்த அழகிய காட்சியைப் படத்தில் ரசிக்கலாம்.

# ஐயங்கள் ஆயிரம்

## கண்ணால் காண்பதும் பொய்

மலைப் பிரதேசங்களில் வீடுகள் சாய்வாகக் கட்டப்படுவது ஏன்? மலைப் பிரதேசங்களில் வீடுகள் சாய்வாக இருப்பது போல் தோன்றுகின்றனவே தவிர அவை அப்படியில்லை. தரையைப் பொறுத்தமட்டில் செங்குத்தாகவே கட்டப்பட்டுள்ளன. மலையின் சரிவை வைத்துப் பார்க்கும்போது அவை சாய்ந்திருப்பதுபோல் பிரமை ஏறபடுகிறது. படிக்கட்டில் நாம் ஏறும்போது படிககட்டை நோக்கி சாய்ந்தபடி செல்வதாக மற்றவர்கள கருதுவார்கள். ஆனால் நாம ஏறும்போது படிக்கடடை நோககி சாய்நதபடி செல்வதில்லை.

சமதளத்தல் கட்டப்படட வீட்டின் நான்கு பக்கச் சுவர்களும் 90° செங்குத்தாக இருககின்றன. மலைச்சரிவில் 90° செங்குத்தாகக் கட்டப்பட்டதுபோல் தெரிகிறது. மலை சாய்ந்திருக்கிறது என்று கருதினால் வீடு நேராகத் தெரியும். மலை சமதளமாக இருப்பதாகத் தோன்றும்போது வீடு சாய்ந்திருப்பதுபோலத் தெரியும்.

இவை தோற்றப் பிழைகளே!

## பழமையை கண்டறியும் முறை

புதைபொருள் ஆய்வாளர்கள், எப்படி புதைபொருள்களின் காலத்தை நிர்ணயம் செயகின்றார்கள். மிகப் பழமையான பொருளாக அதாவது பல லடசம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருந்தால் சோடியம், பொட்டாசியம் ஆகியவற்றின் ஐசோடோப்புகளின் அளவை வைத்து கணிக்கின்றார்கள்.

ஐசோடோப்புகள் என்பவை சாதாரண அணுக்களின் பிரதிவிம்பங்கள். அவை சதாநேரமும் சக்திவாய்ந்த கதிர்களை வெளியே விட்டுக் கொண்டே ஒவ்வொரு அணுவாக நாசமடைந்து விடுகின்றன.

ஐசோடோப்புகள் எந்தளவுக்கு நாசமடைந்திருக்கின்றன என்பதை வைத்து எத்தன்ன காலமாக அந்த நாசம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைக் கணக்கிட்டுவிடுகிறார்கள்.

# மெழுகுவர்த்தியின் மறுபக்கம்

மெழுகுவர்த்திகளில் இருந்து வரும் புகை நுரையீரல்களைத் தாக்குகிறது என டச்சு நாட்டு விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். நிறைய மெழுகுவர்ததிகள் எரியும்போது ஏற்படும் புகை அதிகமான வாகனங்கள் செல்லும் றோட்டில ஏற்படும புகையைவிட ஆபத்தானது என அவர்கள் ஒப்பீடு செய்துள்ளனர்.



கொழுப்புக் காடிகளிலிருந்து தயாரிக்கப்படும் மெழுகு டிசெம்பர், ஜனவரி மாதங்களில் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. ஒளிச்செறிவினை அளக்க முதன்முதலில் ‘மெழுகுவர்த்தித்திறன்’ எனும் அலகுதான் பயன்படுத்தப்பட்டது.

மெழுகுவர்த்திச் சுடரில் புகையை உணடாக்கும் பகுதியில் 4 மண்டலங்கள் உள்ளன. இவை கருநிற மண்டலம், ஒளிமண்டலம், ஒளிர்வற்றமண்டலம், நீலநிறமண்டலம என 4 வகைப்படுகின்றன.

இதில் உள்ள ஒளிர்வற்ற மண்டலத்தில் வாயுக்கள் ஒக்சியனேற்றமடைகின்றன. இதனால் காபன் டை ஒக்சைட்டும் நீராவியும் உண்டாகின்றன.

மெழுகுவர்த்திகள் மட்டுமன்றி பத்தி களிலிருந்துவரும் புகை குறித்தும் எச்சரிக் கையாக இருக்கவேண்டும் என டச்சு விஞ்ஞா னிகள் கூறுகின்றனர்.

மெழுகுவர்த்தி, பத்தியில் இருந்து எழும் புகையில் அதிகளவில் ‘பாலிசைகளிக்’, ‘ஹைட்றோகார்பனகள்’ உளளன. இநதப் புகையில் அதிகளவில் நச்சுத்தன்மை உள்ள துகள்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.


இந்தத் துகள்கள் நுரையீரல்கள் மற்றும் இதயத்திற்கு ஆபத்தை விளைவிக்கின்றன. மெழுகுவர்த்திகள், பத்திகள் ஆகியன அதிகளவில் எரிக்கப்படும் இடங்களில் முறையான காற்றோட்ட வசதிகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும். அப்பொழுதுதான் அங்கு கூடும மக்கள் பாதிக்காமல் பாதுகாபபாக இருப்பார்கள் எனவும் டச்சு விஞ்ஞானிகள் குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

எனவே சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாத, மக்களின் நுரையீரல், இதயம ஆகியவற்றிற்கு இடையூறுசெய்யாத மெழுகுவர்தத்களை உருவாக்கவேண்டிய சூழ்நிலை வந்துவிட்டது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அதற்கான முயற்சிகளும் தொடஙகப்பட்டு விட்டன.

காதால் அறிவுரை கேட்பினும் கருத்தில் நம்பிக்கை உண்டாகாவிட்டால் கடுகளவு நன்மையும் ஏற்படாது. -கதே

# இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல - 39

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



பலஸ்தீனத்தின் விடிவெள்ளியாகத் திகழ்ந்து மறைந்த இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 39**
**‘வலம்புரி ~ சங்குநாதம’**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

**குறிப்பு:-**

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளாகளுககு குலுககல முறைமூலம தெரிவுசெய்யபபடடு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை ‘வலம்புரி’ காரியாலயததில் பெற்றுக்கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 39.**

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முகவரி | :-........................ |
| | ........................ |
| | ........................ |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 37**
**சரியான விடை**

**பாடகர் S.B.P.சரண்**

**இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 37இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | S.கயானி, கலைமகள் வீதி, அரியாலை. |
| இரணடாம் பரிசு | :- | த.தமிழினி, ஆடியபாத வீதி, யாழ்ப்பாணம். |
| மூன்றாம் பரிசு | :- | அ.மாதொருபாகன், கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறை. |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

K.தர்ஷினி, தம்பசிட்டி. K.இராஜகோபால், தொல்புரம். வி.இளங்கோ, கோப்பாய். கெ.நாகராணி, யாழ்ப்பாணம். S.விதுஷன், கொககுவில். R.Y.றொஷான், வடடுக்கோட்டை. S.சித்தரா, வண்ணையூா. த.கலா, வேலணை. லோ.அபராம, வல்வெட்டி. வே.குமாரசுவாமி, கரவெட்டி. து.நக்கீரன், மலலாகம. கு.டிலாணி, கொக்குவில். L.சுவஸ்தகா, உடுப்பிட்டி. P.செல்வராணி, வட்டுக்கோட்டை. சி.விவேக், வியாபாரிமூலை. ஆ.மதன், இணுவில். லோ.கீர்த்திகா, யாழ் நகர். சு.துளசி, மல்லாகம். S.திலகவதி, சங்கானை. ஆ.அனுஷா, சித்தனகேணி. பா.கேதானுஷன், சுன்னாகம். வ.நிசாநதன, வரணி. சொ.நிததியா, கொக்குவில. ம.றமணன, நர்வேலி. ச.பராசக்தி, மானிப்பாய். தெ.வாநிலா, உருமபிராய. செ.பகீரதன், கோண்டாவல். து.ஜெயமலர், வேலணை. ச.ஆரணியா, புங்குடுதீவு. இ.தயாகரன், கோண்டாவில். சு.சரணியா, கந்தர்மடம். பா.மயில்வாகனம், சுன்னாகம். தெ.நிசானுகா, காரைநகர். வ.சுமன, கொடிகாமம். வ.நிலோஜன், யாழ்ப்பாணம். சு.காயத்திரி, வேலணை.

### யாழ்.பல்கலையின் நுண்கலைத் துறையினரது ஏற்பாட்டில்

# தேசியத்தையும் ஒற்றுமையையும் வலியுறுத்தி கிராமங்கள் தோறும் அரங்க ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நாடகமும் அரங்கியலும் 2ஆம் வருட மாணவர்கள் தமது பாடத்திட்டத்தின் ஒரு பகுதி யான அரங்க செயல்திட்டத்



தின் ஓர் அங்கமாக பதினொரு பேர் கொண்ட குழுவாக இணைந்து துறைத்தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதனின் வழிநடத்தலில் தமக்கான அரங்க ஆற்றுகை செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

தமிழர்களின் ஒற்றுமையை யும பலத்தையும் அழித்து, தமிழர்களைத் தனிமைப்படுத்த முயற்சிக்கும் அரசும், அரசிற்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்ற சர்வதேச சமூகங்களின் நடைமுறைகளையும் அவற்றின் உண்மையான உள்நோக்கங்களையும் வெளிப்படுத்தி தமிழர்களின் ஒற்றுமையையும் தேசியத்தின் மீதான உறுதிப்பாட்டையும் வலியுறுத்தும் வகையில் தமது அரங்க செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக யாழ். நல்லூர்க் கோட்டத்திற்கு உட்பட்ட உயர்தரப் பாடசாலைகளிலும், இப்பிரதேசத்திற்கு உடபட்ட கிராமங்களிலும், அரங்க செயற்பாடுகள் நிகழ்த் தப்பட்டு வருகின்றன.

இதன்போது சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள, முதியவர்கள் என ஒன்றுதிரண்டு தமது மௌனங்களைக் கலைத்து இக்குழுவினருடன் இணைந்து கைகளைத் தட்டிப் பாடல்களைப் பாடினர். அரசு, சர்வதேச சமூகம் பற்றிய தமது கோபங்களைத் தெரிவித்ததுடன், கைகளை உயர்த்திக் கோஷங்களை எழுப்பி உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

கணிசமான இளைஞர்கள் இக்குழுவினருடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வரங்க செயற்பாடுகள் ஏனைய பாடசாலைகளிலும, கிராமங்களிலும் நிகழ்த்தப்பட்டு ஒன்றிணைந்த மக்கள் அரங்காக வெளிப்படும்வரை 'ஒற்றுமைக்கான மக்கள் அரங்கச செயற்பாடுகள்' தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(ப)

## பொலிஸார் கண்காணிப்பு

(கோண்டாவில்)

இணுவில் காரைக்கால் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கோஷ்டி மோதல்களையடுத்து அப்பகுதிகளில் ஏற்பட்ட பதற்ற நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அங்கு கோப்பாய் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.


இதனால் அப்பகுதியில் மீண்டும் மோதல்கள் இடம்பெறும் சாத்தியங்கள் குறைவடைந்துள்ளன.

(ப-130)



நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் குருபூசை மண்டபத்தில் இந்து கலாசாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சைவசித்தாந்தப் பெருவிழாவில், நீர்வைமணி ஐயாவினால் வெளியிடப்பட்ட "மெய்கண்ட தேவர் வரலாறு" என்ற நூலின் பிரதியை இந்து கலாசாரத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் சைவப்புலவர் செல்லத்துரை அவர்களுக்கு வழங்குவதையும், அருகில் நூலாசிரியரையும் படத்தில் காணலாம்.

(படம்:-ஐங்கரன்)



ஸ்பெயின் நாட்டில் நடைபெற்ற டேவிஸ் கோப்பை இறுதிப் போட்டியில் ஸ்பெயின் அணியும் அமெரிக்க அணியும் மோதியது. இதில் 5 போட்டிகொண்ட தொடரில் ஸ்பெயின் 3-2 என்ற வெற்றி அடிப்படையில் அமெரிக்காவை வீழ்த்தியது. ஸ்பெயின் வீரர் கார்லஸ் மோயா அமெரிக்காவின் ஆன்டிரொடிக்கை 6:2, 7:6, 7:6 என்ற செட்கணக்கில் வீழ்த்தினார்.

## அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது நியூஸிலாந்து

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில நியூசிலாந்து அணி 4விக்கெற் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது. கடைசி நேரத்தில் அபாரமாக ஆடிய மார்ஷல் அணியை வெற்றி பெறச்செய்தார். இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி பீல்டிங்கை தேர்வுசெய்தது. ஹைடன் ஒரு முனையில் நிதானமாக ஆட, கில்கிறிஸ்ட் தனது வழக்கமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த ஜோடி 64 ஓட்டங்களைக் குவித்தநிலையில் ஹைடன் சின்கிளையரின் பிடி மூலம் வெளியேறினார். கில்கிறிஸ்ட் 39 பந்துகளில் அரைச் சதத்தைக் கடந்தார். இவர் 68 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து வலுவான நிலையில் இருந்த அவுஸ்திரேலிய அணிக்கு வெட்டோரி அதிர்ச்சி அளித்தார். இவரது பந்துவீச்சில் பொண்டிங் 29 ஓட்டங்களுடனும், மார்டின் 1 ஓட்டத்துடனும் சைமண்டஸ் ஓட்ட மெதுவும் இல்லாமலும் ஆட்டமிழக்க அவுஸ்திரேலியா 5 விக்கெற் இழப்புக்கு 123 ரன்களுடன் இக்கட்டான நிலையை அடைந்தது.

ஆறாவது விக்கெற்றுக்கு ஜோடிசேர்ந்த லேமேனும் கிளார்க்கும் சிறப்பாக ஆடி அணியை மீட்டனர். ஹாக் ஆட்டமிழக்காமல் விரைவாக ஓட்டங்களைச் சேர்த்தார். இதனால் அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெற் இழப்புக்கு 246 ஓட்டங்கள் எடுத்தது.

247ஓட்டங்களை இலக்காகக கொண்டு களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு துவக்கம் மோசமாக அமைந்தது. கப்டன் பிளமிங், பரட்லீ பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ஆனாலும் ஆஸ்டில், சின்கிளையர் ஜோடி சிறபபாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. மெக்ராத் கில்லஸ்பி, வார்ன் ஆகிய நட்சத்திரவீரர்கள் இடம்பெறாததால் அவுஸ்திரேலிய அணி பந்துவீச்சில் மிகவும் திணறியது. ஆஸ்டில் 70 ஓட்டங்களுடனும், சின்கிளையர் 48 ஓட்டங்களுடனும் அபாரமாக ஆடி இரண்டாவது விக்கெற்றுககு 128 ஓட்டங்கள் சேர்த்தனர். அடுத்து வந்தவர்களும் விரைவாக ஓட்டங்களைக் குவிக்க நியூசிலாந்து அணி வெற்றி பெற கடைசி 18 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுக்க



வேண்டிய நிலையில் காஸ்ப்ரோவிசின் 48ஆவது ஓவரில் மார்ஷல் மெக்கலம் ஜோடி பவுண்டரிகளை விளாசி 22ஓட்டங்களைக் குவித்தது. இதனால் 49.4 ஓவர்களில் நியூஸிலாந்து 6 விக்கெற் இழப்புக்கு 247 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

(து)

## ஹொக்கி சம்பியன் போட்டியில் இந்தியா தோல்வி

சமபியன்ஸ் ஹொக்கி தொடரில் நேற்று முன்தினம் இந்திய அணி ஹோலந்திடம் தோலவி அடைந்தது. ஆறு நாடுகள் பங்கேறகும் சம்பியன்ஸ் ஹொக்கித் தொடர் பாகிஸ்தானின் லாகூர் நகரில் நடந்துவருகிறது. இதில் மூத்த வீரர்கள் இல்லாத அனுபவமற்ற இளம் இந்திய அணி களமிறங்கியுள்ளது. முதல் போட்டியில இந்தியா ஸ்பெயினிடம 0-4என்ற கோல் கணக்கில் படுதோல்வி அடைந்தது. இந்நிலையில் நேற்று நடந்த இரண்டாவது லீக் போட்டியில் இந்திய அணி தற்போதைய சம்பியனான ஹோலந்தைச் சந்தித்தது.

ஆட்டம் ஆரம்பமான 5ஆவது நிமிடத்தில் சந்தீப் மைக்கேல் முதல கோல் அடிக்க இந்தியா முன்னிலை பெற்றது. இந்த அணியின் ஜெர்ட்ஜான் டெரிக்ஸ் 10ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்பை பயன்படுத்தி கோல் அடித்தார் இந்த அணிக்கு 16ஆவது நிமிடததில் மீண்டும் ஒரு பெனால்டி கார்னர் வாய்ப்பு கிடைத்தது. இம்முறை தேக்தேகிமா கோல் அடித்தார். இநதிய அணியின் மாற்று வீரரான வினய் 20ஆவது நிமிடத்தில் கோல் அடிக்க ஆட்டம் சமமானது. இப்படி இரு அணி வீரர்களும் மாறி மாறி கோல் அடிக்க போட்டி விறுவிறுப்பாகச் சென்றது. இதன் பின்னர் ஹோலந்து அணிக்கு அடுத்தடுத்து பெனால்டி கார்னர் வாய்ப்புகள கிடைக்க வலுவான முன்னிலை பெற்றது. டியுன்டி நோயஜர் காரல் கிளாவா ஆகிய இருவரும தலா ஒரு கோல் அடிக்க முதல் பாதியின் முடிவில் ஹோலந்து அணி 4-2என்ற கோல் கணக்கில் நல்ல முன்னிலை பெற்றது.

முதல் பாதியில் மட்டும் இந்த அணி கிடைத்த ஆறு பெனால்டி கார்னர் வாய்ப்புககளில் நான்கை கோலாக மாற்றியது. இரண்டாவது பாதியில் இந்திய அணியின் அர்ஜுன் ஹாலப்பா 46ஆவது நிமிடததில் கோல் அடித்தார். இதை அடுத்து டியுன்டி நோய்ஜர் மீண்டும் ஒரு கோல் அடிக்க இந்திய அணி தோல்வியை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்நிலையில் ஆட்டத்தின் 63 ஆவது நிமிடத்தில் விக்ரம் பிள்ளை கோல் அடித்து அணிக்கு சிறிது நம்பிக்கை அளித்தார். ஆனாலும் இதற்கு மேல் இந்திய



வீரர்களால் கோல் ஏதும் அடிக்க முடியாதுபோக இறுதியில் ஹோலந்து 5-4என்ற கோல வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

(து)

## விளையாட்டு செய்திகள்

### பல்துறை ஆட்ட வீராங்கனை தயாளினிக்கு கௌரவிப்பு விழா

பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடாத்தப்படவுள்ள யாழ். மாவட்ட பல்துறை ஆட்ட வீராங்கனை செ.தயாளினியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை பருத்தித்துறை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் மு.ப.10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வில் யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரிகள விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்கள், பருத்தித்துறைப் பிரதேச செயலக ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் வீராங்கனை வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், மென்பந்துத் துடுப்பாட்டம், எல்லே, தடகளப்போட்டி ஆகிய விளையாட்டுக்களில் யாழ்.மாவட்டம் சார்பாகப் பங்குபற்றித் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலும் வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ந-19)

# தீவிரவாதிகளின் தாக்குதல்களால் ஈராக்கில் 31 பேர் பலியாயினர்

(பாக்தாத்)

ஈராக்கில் திக்ரித் அருகே பஸ் பயணிகள் 17 பேரைக் கொரில்லாக்கள் சுட்டுக்கொன்றனர். இதற்கிடையே. இரண்டு இடங்களில் நடந்த கார்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 14பேர் கொல்லப்பட்டனர்.

ஈராக்கில் அடுத்தமாதம் பொதுத் தேர்தல் நடக்கவுள்ளது. இந்தத் தேர்தல் நடவடிககைககளைக் குலைப்பதற்காக சதாம் ஆதரவு கொரில்லாக்கள் பொலிஸ நிலையம் மீதும், வெளிநாட்டுப் படைகள தங்கியுள்ள முகாம்கள் மீதும் கார்க் குண்டுத் தாக்குதலை நடத்திவருகின்றனா.

பாக்தாத்தின் புறநகர் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் சக்தி வாய்ந்த கார்க்குண்டு வெடித்ததில் ஏழுபோ பலியாயினர். ஐந்துபேர் படுகாயமடைந்தனர். மோதல் நகரத்தில் குர்திஷ் மக்கள பயணித்த பஸ் மீது கார் ஒன்று மோதி வெடித்ததில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். இதில் ஏராளமான வாகனங்கள் சேதமடைந்துள்ளன. மேறகண்ட இரண்டு சம்பவங்களுக்கும் அல்-கெய்டாவின் ஆதரவு அமைப்பான அல்-ஜர்காவி அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இதற்கிடையே திக்ரித் நகரில் பஸ் பயணிகள் 17பேரைக் காரில் வந்த இரண்டு கொரில்லாக்கள், சரமாரியாகச் சுட்டுக்கொன்றனர்.

இச்சம்பவத்தில் 13 பேர் படுகாயமடைந்தனர். (ப)



இந்தியா – ஆசியான் கார்ப்பந்தயம் இந்தியாவில் தொடங்கி இந்தோனேஷியாவில் முடிவடைகிறது. பந்தயத்தில் கலந்து கொண்ட கார்கள் நேற்று கம்போடியா வந்து சேர்ந்தன. பனோம் பென் நகருக்குச் செல்வதற்குப் பாலம் வசதியில்லாததால் கார்கள் கப்பல் மூலம் மெகோங் ஆற்றைக் கடந்துசென்றன.

# இந்தோனேஷியாவில் வெள்ளம் பதினொரு பேர் பலியாயினர்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவிலுள்ள ஜாவா தீவில் நேற்றுமுன்தினம் பலத்த மழை பெய்தது. அதிபர் சுசிலோ பாம் பங்கின் சொந்த ஊரான பசிட்டான் மற்றும் அவரது தாயார் ஊரான பளைட்டார் ஆகிய பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. கடும் மழை மற்றும் வெள்ளத்தால் 11பேர் இப பகுதியில் பலியாகியுள்ளனர். 3ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த வெள்ளப்பெருக்குக் காரணமாக நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயிருக்கின்றனர். இவர்களை மீட்கும் பணிகள் தற்பொழுது துரிதப்பட்டுள்ளன.

அத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகளை வழங்கவும் அந்நாட்டு அரசு நடவடிககைகளை எடுத்துள்ளது. (ப)

# 30ஆயிரம் கிலோகிராம் சொக்லெட்டில் பொம்மைகள்



கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி இத்தாலியின் நேப்பிள்ஸ் நகரில் சொக்லெட்டால் குழந்தை, கன்னி மேரி, ஆடுகள் மற்றும் மேய்ப்பர் சிலைகளை அமைத்துக் காட்சிக்கு வைத்துள்ளனர். 3ஆயிரம் கிலோ சொக்லெட்டைப் பயன்படுத்தி 30 சமையல் கலைஞர்கள இந்தச் சிலைகளை உருவாக்கியுள்ளனர். (ப)

WORLD NEWS உலக தரிசனம்

# தீவிரவாதிகளின் தாக்குதலால் காஷ்மீர் மாநிலத்தில் 12பேர் பலி

(ஸ்ரீநகா)

காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் மேஜர் ஒருவர் உட்பட 11 இராணுவத்தினரும் டிரைவா ஒருவரும் கொல்லப்பட்டனர்.

நிலத்திற்கு அடியில் செல்லும் குழாயில் அதிபயங்கர வெடிகுண்டை மறைத்து வைத்து வெடிக்கச் செய்ததில் இராணுவ வீரர்கள் பயுணம்செய்த வாகனம வெடித்துச் சிதறியது.

சோபோரே என்ற இடத்தில் மத்திய ரி சர்வ் படை பொலிஸார் 5பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட சம்பவம் நடந்தது 48 மணி நேரத்திற்குள் மற்றொரு கொடூரத்தாக்குதலைத் தீவிரவாதிகள் நடத்தியுள்ளனர். காஷ்மீரில் பாரமுல்லா மாவட்டத்தில் சோபோரே என்ற இடத்தில மத்திய ரி சர்வ் பொலிஸ் படை முகாம் மீது இரண்டு நாட்களுக்கு முன் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ஐந்து வீரர்கள் கொல்லப்பட்டனர். தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளும் பல மணி நேர சண்டைக்குப் பின்னர் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, மாநிலம் முழுவதும் தீவிரவாதிகளை வேட்டையாடும பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில்,

நேற்று முன்தினம் மாலை இராணுவ வீரர்கள் அனந்தநாக் மாவட்டத்தில் தேடுதல்வேட்டை நடத்தினர். பின்னர் அவர்களில் சிலர் இரவில் ஒரு தனியார் வாகனம் மூலம் புல்வாமா மாவட்டத்திற்குச் சென்றனர் .அந்த வாகனத்தில் மேஜர் லலித், சிறப்புப் பொலிஸ் அதிகாரி இமிதியாஸ் அகமது, ஒன்பது இராணுவ வீரர்கள் மற்றும் டிரைவர் ஆகியோர் பயணம்செய்தனர்.

மக்கள் அதிகம் பயன்படுத்தாத பாதை வழியே அவர்கள் சென்றனா. நயினா பகுதிக்கும் பாடபோரா பகுதிக்குமிடையே அவர்கள் பயணம் செய்த வாகனம் வந்த போது திடீரென வெடிகுண்டு வெடித்தது.

இந்தத் தாக்குதலில் வாகனத்தில பயணம் செய்த 12பேரும் பரிதாபமாகப் பலியாயினர். (ப)

# கவுதமாலாவில் பஸ் விபத்து 21பேர் பலி; 30பேர் காயம்

மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவின் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கான கொண்டாட்டங்கள் இப்போதே தொடங்கிவிட்டன. அங்குள்ள ஒரு தேவாலயத்திற்குச் செல்வதற்காகப் பயணிகளை ஏற்றிக் கொணடு ஒரு பஸ மலைப்பாதையில் சென்று கொணடிருந்தது. அப்போது எதிரே இன்னொரு பஸ் வந்தது.

நேருக்கு நேர் இரு பஸ்களும் மோதியது. இதில் ஒரு பஸ் மலைப்பாதையில் உருண்டு விழுந்தது. அளவுக்கதிகமாக அந்த பஸ்ஸில் பயணிகள் ஏற்றப்பட்டிருந்தனர். இதில் 21பேர் உடல்நசுங்கிப் பலியானார்கள். 30இற்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயம் அடைந்தனர்.

இந்த விபத்தை அடுத்து அப்பகுதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருப்பதுடன் மீட்புப்பணிகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இந்நாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதாக அந்நாட்டுப் பொலிஸா தெரிவித்தனர். (ப)

# அதிபர், தளபதி பதவிகள் தொடர்ந்தும் முஷாரப்பிடம்



பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இராணுவ தளபதிப் பதவியையும், அதிபர் பதவியையும் தன்னிடமே வைத்துள்ளார்.

ஏதாவது ஒரு பதவியை விட்டு அவர் விலகவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வற்புறுத்தி வருகின்றன.

இதனையடுத்து தளபதிப் பதவியை இராஜினாமா செய்யப்போவதாக முதலில் அறிவித்த முஷாரப் இரு பதவிகளிலும் நீடிப்பேன் என்று சமீபத்தில் அறிவித்தார்.

இந்தநிலையில் முஷாரப் இரு பதவிகளிலும் இன்னும் ஒரு ஆண்டு நீடிக்க வகைசெய்யும் சட்டம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

மஜ்லிஸ் கட்சிகளின் ஆதரவுடன் அந்தச் சட்டம் நிறைவேறியது. முஷாரப இப்போது அமெரிக்கா சென்றுள்ளதால் தற்காலிகமாக அதிபர் பதவியை முகமது ஆம்ரோ கவனித்து வருகிறார். (ப)



ஜப்பானின் டொயோட்டோ மோட்டோர் நிறுவனம் ஜனிட் என்ற புதிய மின்சார மோட்டார்க்காரைத் தயாரித்துள்ளது. இந்த மின்சாரக் காரில் ஒரேயொரு பயணி மட்டுமே அமரமுடியும். குறைந்த வேகத்தில் செல்லும்போது அந்தக் காரின் வடிவம் ஒருமாதிரியாகவும், அதிக வேகத்தில் செல்லும்போது காரின் வடிவம் ஒருமாதிரியாகவும் தானாக மாறிவிடும்.

# கசகஸ்தானில் சுரங்க விபத்து 21பேர் பலி; 3பேர் படுகாயம்

கசகஸ்தான் நாட்டிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 21பேர் இறந்தனர். சோவியத் யூனியனிலிருந்து தனியாகப் பிரிந்த நாடு கசகஸ்தான். இங்கு காரகாதா மாகாணத்தின் மத்திய பகுதியில் நிலக்கரிச் சுரங்கம் உள்ளது. நேற்றுமுன்தினம் அதிகாலை இந்தச் சுரங்கத்தில் 24பேர் பணியில் இருந்தனர். அப்போது எதிர்பாராதவிதமாக மெதேன் வாயு அதிகரித்து வெடித்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் பணியிலிருந்த 24பேரும் சிக்கிக்கொண்டனர்.விபத்துக் குறித்து தகவல் அறிந்ததும் உயர் அதிகாரிகளும் மீட்புக்குழுவினரும் விரைந்துசென்றனர். சுரங்கப் பகுதியிலிருந்த 21பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. படுகாயமடைந்த 3பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மீட்புப்பணிகள் துரிதப்பட்டாலும் அங்கு மோசமான காலநிலை நிலவுவதால் அவற்றை திருப்திகரமாக மேற்கொள்ளமுடியாதுள்ளது. (ப)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் - குறள்

வலம்புரி

# வைத்திய அதிகாரியின் அதிர்ச்சித் தகவல்

☼தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இளவயது கர்ப்பவதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

☼சட்டவிரோத கருச்சிதைவுகளும் கடந்த வருடங்களைவிட இவ் வருடம் மிகவும் அதிகரித்த தொகையைக் காட்டியுள்ளது.

இவ்வாறு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியும் யாழ். போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி (செல்வி) கனகரத்தினம் அவர்கள் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு நடைபெற்ற தாய், சேய்நலப் பயிற்சி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே டாக்டர் கனகரத்தினம் அவர்கள் மேற்கண்ட அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் கூறியிருப்பது தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்டதாக இருப்பினும், அவரின் புள்ளி விபரங்கள் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கும் பொருத்துடையதாகவே இருக்கும்.

இவ்வாறு இளவயதில் கர்ப்பமடைதல், சட்டவிரோத கருச்சிதைவு என்பது கலாசார மாறுதலின் விளைவு என்பதற்கப்பால், அதற்குள் இருக்கக் கூடிய உயிராபத்துக்கள் பற்றியும் சிந்திப்பது அவசியமாகும்.

இளவயது திருமணங்களும், சட்டவிரோதக் கருச்சிதைவுகளும் நிகழ்வதற்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும், அவற்றில் முக்கியமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவையாவன,

☼இளவயதில் ஏற்படக்கூடிய காதல் வயம், இதன் காரணமாக இளவயதிலேயே திருமணம் செய்து வைக்கவேண்டிய கட்டாய சூழ்நிலை.

☼பெண் பிள்ளைகளை தமக்கு சுமைகளாக நினைத்துக் கொள்ளும் பெற்றோர் தமது பெண் பிள்ளைகளை இளவயதிலேயே திருமணப் பந்தத்திற்குள் தள்ளிவிடுதல்.

☼குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைத் தெரிந்து கொள்ளாத தாய்மார்கள் குடும்பச் சுமை காரணமாக, சட்டவிரோத கருச்சிதைவை மேற்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலை.

☼மூலைக்கு மூலை புற்றீசல் போலத் தோன்றும் போலி மருத்துவர்களும், போலி மருத்துவ நிலையங்களும் மேற்கூறப்பட்டவை, இளவயதுத் திருமணத்திற்கும், சட்டவிரோத கருச்சிதைவுக்கும் காரணமாக அமைகின்றன எனக் கூறிக்கொள்ளலாம்.

எனினும் அதற்கு அப்பால் இருக்கக்கூடியவை கட்டிளமைப் பருவத்திலான பிரச்சினைகளாகும். அதாவது கட்டிளமைப் பருவத்தினை அடைந்து கொள்ளும் இருபாலாரும் ஒழுங்கான முறையில் கண்காணிக்கப்படாவிடில் அல்லது அவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படாவிடில் அங்கு விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்தேறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இவ்வாறு கட்டிளமைப் பருவத்தினரின் எல்லை கடந்த - கலாசார விழுமியங்களை உடைத்தெறிவதான நிகழ்வுகள் நடந்தேறுவதற்கு பின்வருவனவற்றை காரணங்களாகக் குறிப்பிடலாம்.

☼பெற்றோர்களின் அக்கறையீனம்.

☼தொலைக்காட்சிகளில் இடம்பெறும் நவீன கால சினிமாக்களும், தொடர் நாடகங்களும்.

☼யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடப்பெயர்வு, இதனால் சமூக கலாசார கட்டுமானங்களில் ஏற்பட்ட உடைவுகள்.

☼கால அசைவு தந்த கூட்டுக் குடும்பச் சிதைவும் அதனால் சமூகக் கண்காணிப்பின் இழப்பும்.

போன்றவற்றினால் கட்டிளமைப் பருவத்தினர் எதிர்காலத்தை மறந்து விபரீதமாக நடந்துகொள்கின்றனர்.

இத்தகைய சம்பவங்களும் வைத்திய அதிகாரி தெரிவித்த அதிர்சித் தகவலுக்கு வழிவகுத்துள்ளது என்பதை எவரும் மறந்துவிடல் ஆகாது. எனவே இது விடயத்தில் குடும்ப உறவுகள், சமூக அமைப்புகள் அதீத கண்காணிப்பில் ஈடுபடுவதும், சுகாதார சேவையாளர்கள் விழிப்புடன் செயலாற்றுவதும் எதிர்கால சந்ததியை காப்பாற்றுவதற்கான வழியாக அமையும்.

# உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு பல்டியடித்தாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் அழியாது

## கட்சியின் பிரதித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்கால சமுதாயத்துக்காக அர்ப்பணிக்கப்பட்ட கட்சியென கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியானது எப்போதும் ஒழுக்க நெறிகளுக்கு அமைய செயற்பட்டு வருகின்றது.

கட்சியைவிட்டு பலர் ஆளும் கட்சிக்குச் செல்கினறனர் யார் கட்சி மாறினாலும் ஐக்கிய தேசியக் கட்சி அழியாது. எமது கட்சி ஒழுக்கநெறியைக் கொண்ட பழமை வாய்ந்த கட்சியாகும். ஒழுக்கநெறியை சீர்குலைப்பதற்கு இனிமேல் இடமளிக்கப்படமாட்டாது என்று மேலும் தெரிவித்தார்.

கட்சியின் தேசிய அமைப்புச் செயலாளர் எஸ். பி.திஸநாயக்க உரையாற்றுகையில்,

கூட்டமைப்பு அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் யதார்த்த பூர்வமான வரவு- செலவுத் திட்டமாக அமையவில்லை.

அத்துடன் இவ்வரவு- செவுத்திட்டம் தேர்தல் ஒன்றை நோக்காகக் கொண்டே தயாரிக்கப்பட்டது.

உலக வங்கி மேற்கொண்ட 16 திட்டங்களை தற்போது நிறுத்தியுள்ளது.

அதேவேளை சர்வதேச நாணய நிதியம் நிதி உதவி வழங்கிய 8 திட்டங்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால இன்று செய்வதறியாது இருக்கும் சந்திரிகா ஆட்சியில் தொடர்ந்தும் நிலை பெறுவதற்காகவே வரவு- செலவுத் திட்டத்தை முன்வைத்தார் என்று குறிப்பிட்டார்.கட்சியின் தென்மாகாண சபை உறுப்பினர் புத்திரின பத்திரன உரையாற்றுகையில்,

ஆட்சியைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு புதிய ஆரசியல் தந்திரோபாயங்களை பயன் படுத்துவதாகக் குற்றம் சாட்டினார்.

அத்துடன், நடைமுறையிலுள்ள அரசில் யாப்பை மாற்றுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்துவது குறித்து தற்போது அரசாங்கம் யோசித்து வருகின்றது. ஆனால் சர்வஜனவாக்கெடுப்பற்கு முன்வைக்கப்படும் கேள்விகள் என்ன?

கேள்விகள் எவையும் இல்லை. அவர்களுக்கு தேவையானால இரண்டு அல்லது மூன்று கேள்விகளை முன்வைக்க முடியும். அத்துடன்,என்ன கேள்விகளை முன்வைக்கமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ந-8)

# இலங்கைத் தேசத்தை தூக்கிலிட ஜனாதிபதி முயற்சி செய்கிறார்!!

## தமிழ் மக்கள் பேரவை அறிக்கை

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த விரும்பாத ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இலங்கைத தேசத்தை தூககில் போட முயற்சிக்கினறார் என திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாவீர்நாள் உரையில், தமிழீழ தேசியத் தலைவா இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும் அவ்வாறின்றி கால நீடிப்புடன் இழுத்தடிப்பு நடக்குமாயின் தமது போராட்டத்தை முன்னெடுபபதனை விட வேறுவழி இல்லை எனவும் தொிவித்தார்.

இந்த உரையானது சமாதானத்தை விரும்பும் சகல மக்களாலும் வரவேற்கப்பட்டது. அவாின் அந்த மகத்தான உரையை அரசாங்கத்தின் அங்கமாகிய ஜே.வி.பி. என்னும் குழப்பவாத போினவாதிகளும், ஹெல உறுமய போன்ற பௌத்த போினவாதிகளும் ஏன் அரசாங்கத்தின் ஒரு பிாிவினரும் கூட திாிவுபடுத்தி தென் இலங்கையின் இனவாதப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

தேசியத் தலைவாின் உரைக்கு அரசாங்கத்தின் பதில் என்னவாக அமையப் போகின்றது என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு ஜனாதிபதியின் நடவடிக்கை மிகப் பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தி உள்ளது.

அதாவது சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் கூறும ஜனாதிபதி ஆயுதங்களை கொள்வனவு செய்து பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகிறார்.

1994ஆம் ஆண்டு சமாதான தேவதையாகத் தன்னை வெளிப்படுத்திக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்திாிகா அம்மையார் தமிழ் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று பெருவெற்றி ஈட்டினார்.

உண்மையான சமாதானத்தை கொண்டு வருவார் என எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு எதிராக ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் மோசமான யுத்தத்தை தொடர்ந்தார்கள். யுத்தத்தின் காரணமாக முழுத்தேசமும் சீரழிந்தது. இலட்சக்கணக்கான மனித உயிர்கள் அநியாயமாகப் பலியாகின. கோடிக் கணக்காண சொத்துக்கள் அழிந்துள்ளன. இலங்கைத் தேசத்தின் பொருளாதாரம் சிதைந்து போனது.

தற்போதுள்ள சமாதானம் நீடித்து நிலைக்க வேண்டும் என்று எண்ணிய மக்களுக்கு ஜனாதிபதியின் சில செயற்பாடுகள் மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஜனாதிபதிக்கு உண்மையான பற்று இருக்குமாயின் சமாதானத்திற்கு எதிரான ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளை தூக்கியெறிந்து விட்டு இடைக்கால நிர்வாக சபையோசனை அடிப்படையில் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டுமென்று வேண்டுகின்றோம். அவ்வாறு ஜனாதிபதி செய்வாராயின் சமாதானத்தை விரும்பும் சகல சக்திகளும் அவருக்கு ஆதரவு வழங்குவார்கள்.

அவ்வாறு இன்றி ஜே.வி.பி.போன்ற காடைத்தன அரசியல் வாதிகளுக்கும் பயந்து தனது இருப்பினை நிலை நிறுத்திக் கொள்வதற்காக அரசியல் காய்நகர்த்தல்களில் ஈடுபட்டு மீண்டும் தமிழ் மக்களுககு எதிரான செயற்பாடுகளில் ஜனாதிபதி ஈடுபடுவாரானால் இலங்கைத் தேசம் பொருளாதார ாதியாகவும் அரசியல் ரீதியாகவும் சீரழிந்து சின்னாபின்னம் ஆகும் என்பது ஐயமுமில்லை.

எனவே ஜனாதிபதி உடனடியாக பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டும் என வேண்டிக்கொள்கின்றோம்.

அவவாறு இன்றி ஜனாதிபதி தற்போதைய நிலைப் பாட்டிலேயே இருப்பாராக இருந்தால் இதனை ஒரு யுத்த அறிவிப்பாக தமிழ் மக்கள் கருதுவார்கள். மீண்டும் தமிழ் மக்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை தமிழீழ தேசியத் தலைவரோடு சேர்ந்து எதிர்கொள்வதனை விட தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை.

ஜனாதிபதி இந்தியா, அமொிக்கா போன்ற ஏகாதி பத்தியவாதிகளின் துணையுடனும் ஏனைய நாடுகளின் இராணுவ உதவியுடனும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க நினைத்தால் உண்மையில் அது இலங்கைத் தேசத்தை தூக்கில் போடும் முயற்சியாகவே அமையும் என்பதனை அரசிற்கும் மதிப்பார்ந்த ஜனாதிபதிக்கும் திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# சமாதான மேம்பாட்டை ஏற்படுத்துதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஜா தொலைக்காட்சி நிறுவனத்தினால் இலங்கையில் சமாதான மேம்பாட்டை ஏற்படுத்தும் முகமாக பத்திர முல்லவிலுள்ள அவர்களது தலைமைச் செயலகத்தில் கடந்த 30 ஆம் திகதி பயிற்சிப்பட்டறையொன்று நடாத்தப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் சார்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தின புலன் விசாரணை அதிகாரி ரி. சுவேந்திரராசா கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் சமாதானத்தை மேம்படுத்தும் இடமாக தென்பகுதி மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் வடக்கு- கிழக்கு மாகாணத்திலிருந்து யாழ். மாவட்டமும் ,மட்டக்களப்பு மாவட்டமும் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இம் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் தலா 24 பேரை அடக்கிய இரு குழுக்கள் அமைக்கப்பட்டு கல்வியறிவுள்ளவர்களையும், மாணவர்களையும் ஒரு குழுவாகவும் பத்திரிக்கையாளர்களை இன்னொரு குழுவாகவும் உள்ளடக்கி அவர்கள் ஊடாக சமாதானத்தை மேம்படுத்தி இந நாட்டில் நல்ல சூமக நிலையை ஏற்படுத்தும் முன்முயற்சியில் 'ஜா' தொலைக்காட்சி நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. இச் செயற்றிட்டம் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நடை முறைப்படுத்தப்படவுளஎது. (ந-19)

## திருப்பலி ஒப்புக் கொடுத்தல்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயத்தில் நாளை புதன்கிழமை அமல உற்பவ கடன் திருநாள் திருப்பலி காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (ப-51)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என் ஆன்மாவைத் திருப்தி செய்கின்ற பொருள் இந்த உலகில் கிடையாது. மேல் உலகிலும் கிடையாது. கீழ் உலகிலும் கிடையாது என்பது அழிவற்ற நியதி. என் ஆன்மாவின் ஆசைக்கு முன்னால் நட்சத்திரங்களும் மேல் கீழ் உலகங்களும் பிரபஞ்சம் முழுவதும் வெறுக்கத்தக்க ஒரு நோயே தவிர வேறல்ல.

சுவாமி விவேகானந்தர்

# தமிழ் மக்கள் மத்தியில் மீண்டும் யுத்தக்காற்று வீசும் அபாயம்!

## திருமலை மாவட்ட பொது அமைப்புக்கள் அறிக்கை

யுத்தம் ஓய்ந்து சமாதானக் காற்று வீசும் காலத்திலும் அவ்வப்போது இடம்பெறும் சமூக மோதல்களும், அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களும் மிகுந்த வேதனையை ஏற்படுத்துகிறது.

இவ்வாறு இலங்கைச் செஞ்சிலுவை சங்கத்தின் திருகோணமலைக் கிளையினர் அபிவிருத்திக்கும், புரிந்துணர்வு முன்னேற்றத்திற்குமான இளைஞர் அணி, சமூக மாற்றத்திற்கான நடவடிக்கை அணி, சமூக அபிவிருத்தி ஆய்வு நிறுவனம், நஷனல் விசன், கிழக்கு வள அபிவிருத்தி மையம், சகவாழ்வு மையம், சமூகப் பாதுகாப்பு வலயமைப்பு என்பன இணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஒரு யுத்தக்காற்று எம்மத்தியில் வீசத்தொடங்கிவிட்டது. மீண்டும் சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் தோன்றிவிட்டன. கடந்த 3 வருடங்களாக நீடித்திருக்கும் யுத்தநிறுத்தம் மூவின மக்கள் மத்தியிலும் என்றுமில்லாதவாறு நம்பிக்கையை கட்டியெழுப்பியது.

பாகுபாடில்லாமல் கொடிய யுத்தமொன்றின் முடிவை நிம்மதியாக சகல மக்களும் கொண்டாடினர். ஆனால் எல்லாமே கனவாகிவிட்டதோ என நாம் அச்சப்படுகின்றோம்.

யுத்தம் ஓய்ந்து சமாதானக் காற்று வீசும் காலத்திலும் அவ்வப்போது இடம்பெறும் சமூக மோதல்களும் அப்பாவி மக்களின உயிரிழப்புக்களும் மிகுந்த மன வேதனைக்கும், ஆதங்கத்திற்கும் உரியதாகும்.

குறிப்பாக யுத்த காலத்தில் எமது மாவட்டத்தில் நடைபெற்ற அப்பாவி மக்கள் மீதான உயிர்க் கொலைகளும் வன்முறைச் சம்பவங்களும் மிகுந்த மனவேதனைக்குரியதாகும்.

சமீப காலத்தில் மூதூர், கிண்ணியா- நடுஊற்று, அன்புவழிபுரம் போன்ற பகுதிகளில் இடம்பெற்ற அப்பாவி மக்களின் உயிரிழப்புக்களும், சொத்தழிப்புக்களும் எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியவையல்ல.

இந்த அடிப்படையில்தான் நாம கடந்த 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களையும், அதன் உச்சமாக இடம்பெற்ற உயிரிழப்புக்களையும் பார்க்கின்றோம். இவ்வாறான சம்பவங்கள் நீடிப்பது சமூகங்களின் மத்தியிலிருந்து சமாதானம் குறித்த நம்பிக்கையை முற்றாக சிதைத்துவிடும் அபாயமுள்ளது.

ஒவ்வொரு சமூகத்திற்கும் தங்களது தனித்துவங்களையும், அரசியல் கோரிக்கைகளை வெளியிடுவதற்கான உரிமையையும் நாம் மதிக்கின்றோம். ஆனால் அப்பாவி மக்களின் மீதான தாக்குதல்களாலும் உயிரிழப்புக்களாலும் எதையும் சாதித்துவிடமுடியாது.

ஆகவே ஒவ்வொரு சமூகத்திற்கும் இவ்வாறான சம்பவங்களை தடுத்து நிறுத்தவேண்டிய தார்மீகப் பொறுப்பு உண்டு. அறியாமையாலும், உணர்ச்சிவசத்தாலும் தோன்றும் இவ்வாறான சம்பவங்களை சமாதானத்திற்கு எதிரான தீய சக்திகள் பயன்டுத்திக் கொள்ளும் அபாயமுள்ளது.

இனிவரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதே திருகோணமலை வாழ் மூவின மக்களின் எதிர்காலக் கடமையாகும்.இதனை நாம் உங்களிடம் மட்டுமே சொல்லமுடியும் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-4)

# வட. கிழக்கு ஆளுநராக டிரோன் பதவியேற்றார்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநராக டிரோன் பெர்னாண்டோ நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

முன்னர் வடக்குக் கிழக்கு ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டதையடுத்தே டிரோன் பெர்னான்டோ வடக்குக் கிழக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த சிறில் ஹேரத் ஓய்வுபெற்றதை அடுத்து அசோக ஜெயவர்த்தன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-8)


கண்ணீர் அஞ்சலி

பாலசோதி பவிந்தன்

(துன்னாலை)

தோற்றம் 08.07.1979 மறைவு 05.12.2004



இளையவனே! இனியவனே!
எம்மூரின் நல்லவனே!
இளங்காலம் முடியுமுன்னே!
எங்கு நீ சென்றாய் ஐயா!

காலனவன் கையில் உந்தன்
காலமது கரைந்ததோடா?
மீண்டு வருவாயடா - எம்
மீளாத் துயரைத் தீர்ப்பாயடா!

நண்பர்கள், ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்



உங்கள் வலம்புரியில்...

மீள்பார்வை

புதியகளம்,

அரசியல், அறிவியல், சமூகவியல், வரலாறுகளை அறிந்துகொள்ள அரியதோர் சந்தர்ப்பம்

மீள்பார்வையில்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

எழுதிய

யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்


# கிறிஸ் கத்தியுடன் நேற்றிரவு ஆறு இளைஞர்கள் கைது

ஆட்டோ ஒன்றில் கிறிஸ் கத்தியுடன் சென்றுகொண்டிருந்த 6 இளைஞர்கள் கோண்டாவில் ஸ்ரேசனடியில் வைத்துக் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 9 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கறுப்புநிற உடைகளுடன் கறுப்புத் தொப்பியும் அணிந்து கிறிஸ் கத்தி, 2 நெஞ்சாக் ஆகியவற்றுடன் பிரஸ்தாப இளைஞர்கள் ஆட்டோவில் சென்றுகொண்டிருந்த போது சந்தேகத்தில் பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டபோது மேற்படி ஆயுதங்கள் சிக்கின. இதனையடுத்து ஆறுபேரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கோண்டாவில் கிழக்கு கொட்டைக்காட்டைச் சேர்ந்த தர்மராசா சுகந்தன் (வயது 20), கொக்குவில் நந்தாவில் கிழக்கைச் சேர்ந்த துரைசிங்கம் ரகுராம் (வயது 18), கொக்குவில் குளம்கரையைச் சேர்ந்த கதிரமலை கோகுலன் (வயது 22), கோண்டாவில் கிழக்கு குளக்கரை லேனைச் சேர்ந்த யோகநாதன் பார்த்தீபன் (வயது 21), கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியைச் சேர்ந்த கிருஸ்ணகுமார் கிருஷாந்தன் (வயது 20), கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் வீதியைச் சேர்ந்த நந்தகுமார் செந்தூரன் (வயது 21) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருப்பதாக கோப்பாய் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தெரிவித்தார். (த)


ராஜா, யாழ்ப்பாணம்

5 முதல் 9 வரை

சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம்

SPIDERMAN -2

புதிய நேரம் 10.30, இரவு 9.30

ஸ்ரீகாந், சினேகா நடித்த

போஸ்



புதிய நேரம்: 2.30, 6.30 மட்டும்



நாதன்ஸ் சினிமா

யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இளையதளபதி விஜய், சங்கவி நடித்த

கோயம்புத்தூர் மாப்பிள்ளை



கா.நேரம் : 10.30, 2.30

தினசரி இரவு 6.30, 9.00 (பு.நே)

VAN HEL SING

(ஆங்கிலம் - றகுலா படம்)


## குருநகர், திருநகர் சம்பவத்தின் எதிரொலி

# யாழ்.மாநகரசபை சுகாதார ஊழியர்கள் மறியல்போர்

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதி ஊழியர்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குருநகர் - திருநகர் பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதலினால் ஏற்பட்ட பதற்றநிலை தணியும் வரை பணியை இடைநிறுத்தி தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவுமாறு கோரியே மாநகரசபை சுகாதாரப் பகுதி ஊழியர்கள் அதன் அலுவலகம் முன் மறியற் போரில் ஈடுபட்டனர்.

மேற்படி போராட்டத்தை அடுத்து மாநகரசபை ஆணையாளர் கலாநிதி குணராசா, சுகாதார தொழிற் சங்க உறுப்பினர்களுடன் விடயம் குறித்து கலந்துரையாடினார்.

விடுதலைப்புலி உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

ஊழியர்களின் கோரிக்கைக்கு சாதகமான பதிலை இன்று வழங்குவதாகவும், இதனால் போராட்டத்தைக் கைவிடுமாறும் ஆணையாளர் கேட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க-51,130)

# விடுமுறையில் வைத்தியர் நோயாளர்கள் ஏமாற்றம்

## அம்பன் மருத்துவமனையில் சம்பவம்

(துன்னாலை)

வைத்தியர் விடுமுறையில் சென்றதால் மருந்தகத்துக்குச் சென்ற நூற்றுக்கணக்கான நோயாளர்கள் திரும்பிச்செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் வடமராட்சி கிழக்கு அம்பன் மருந்தகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நீண்டகாலத்தின் பின்னர் அண்மையில் திறக்கப்பட்ட அம்பன் மருந்தகத்தில் வைத்தியர் ஒருவரே கடமையாற்றி வருகிறார். நேற்றைய தினம் அவர் விடுமுறையில் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அறியாமல் மருந்தகத்திற்குச் சென்ற நூற்றுக்கணக்கான நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

நோயாளர்களுக்கு மேலும் அவஸ்தைகள் ஏற்படாமல் தடுப்பதற்கு பதில் வைத்தியர் ஒருவரை அங்கு நியமிக்குமாறு நோயாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மருந்தகத்தில் 14 ஊழியர்கள் கடமையாற்றுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-101)

## பிரான்ஸிலிருந்து...

ஒன்றில் தங்கியிருந்த அவர் அண்மையில் நாட்டிற்குத் திருப்பியனுப்பப்பட்டார்.

நாடு திரும்பிய அவருக்கு இங்கு ஏற்ற வேலைவாய்ப்புக் கிடைக்கவில்லை. சில மாதங்கள் வீடியோக் கடையிலும், அரிசி ஆலையிலும் பின்னர் வீட்டில் கோழி வளர்ப்பிலும் ஈடுபட்ட அவர் இவை எதனிலும் திருப்தியடையாத நிலையில் மனமுடைந்து பூச்சிக்கொல்லி மருந்தைக் குடித்து தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-101)

## பிரபாவின்...

என்றார். இதனால் திருப்தியடையாத ஜனாதிபதி பின்னர் எரிக் சொல்ஹெய்முடன் தொடர்புகொண்டு அதேகேள்வியைக் கேட்டார். அதற்குப் பதிலளித்த சொல்ஹெய்ம் பிரபாகரனின் உரையில் சூசகமாக என்ன கூறப்பட்டுள்ளது என்பதை கூறக்கூடிய ஒரேஒரு பொறுப்பான நபர் பிரபாகரன்தான் என்று கூறியதுடன், அதுபற்றி நாம் கருத்துக்கூறமுடியாது என்று நினைக்கின்றேன் என்றார் (இ)

## தமிழ்...

இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதேவேளை அண்மைக்காலமாக கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்படுவது அதிகரித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-4)

## புலிகளின் இடைக்கால...

லுக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் இதுவரை உருவாக்கப்படவில்லை. இது இயல்பு நிலையை ஏற்படுத்த முக்கிய தடையாக உள்ளது.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால்தான் அவசர, மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகின்றோம்.

தென்பகுதி மக்கள் பெற்றுள்ள அனைத்து உரிமைகளும் வடக்கு - கிழக்கு மக்களுக்கும் அவசியமானவை என்பதை தெற்கு மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கருத்துக்களும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## சவுதியிலுள்ள...

ஜித்தாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இரண்டு இலங்கையர்கள் சாரதியாகவும் மேலும் இருவர் ஏனைய பணிகளிலும் பணிபுரிகின்றனர்.

இவர்கள் தொடர்பான விபரங்களை அறிவதற்காக ரியாத்தில் உள்ள அமெரிக்க கவுன்சிலருடன் தொடர்பு கொண்டுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அமெரிக்க ஊடகங்களின் தகவல்களின்படி ஐந்து தீவிரவாதிகள் இத் தாக்குதலைத் தொடுத்ததாகவும் மூவர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டுள்ளதுடன் ஏனைய இருவரும் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தூதரகத்தில் பணியாற்றிய ஊழியர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரியவில்லை என்றும் தாக்குதல் நடத்திய ஐந்து தீவிரவாதிகளில் மூவர் உயிரிழந்ததுடன் மற்றைய இருவரும் காயமடைந்துள்ளதாக அமெரிக்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஊழியர்கள் தீவிரவாதிகளால் பிணைக் கைதிகளாக பிடிக்கப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் நேற்று வரை வெளிவரவில்லை. (த-04)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.